25/02/04

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!

மகாராசி சில்க்ஸ்



- சல்வார் கிற்
- இந்தியன் சாறி வகைகள்
- மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்

அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 04 (25.02.2004) புதன்கிழமை இதழ்:147

# பொதுத் தேர்தல் நடவடிக்கைகளால் யுத்தநிறுத்தம் பாதிக்கப்படக்கூடாது!



## எச்சரிக்கிறார் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர்

(லண்டன்)

**தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் கட்சித் தலைவர்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பாதிக்காத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிவடையும் பட்சத்தில் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று பிரிட்டனின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மைக் ஓ பிறெய்ன் எச்சரித்துள்ளார்.**

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இங்குள்ள அபிவிருத்தி நிலைமைகள், எதிர்வரும் பொதுத்தேர்தல்கள் ஆகியன தொடர்பாக ஆராய்வதற்கென லண்டனில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் கலந்துகொண்டார். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்காக அரும்பாடுபட்டுவரும் நோர்வே அரசாங்கத்தையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளையும் தமது அரசாங்கம் பாராட்டுவதாக பிரிட்டன் அமைச்சர் மைக் ஓ பிறெய்ன் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் யாழ்.தலைவர் சேவை முடிவு!

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் றெஜார்ண் போர் உல்வ் (Rejoern Forsulf) இன்றுடன் தனது சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதாகவும் இவரது இடத்திற்கு நாளை முதல் புதிய தொரு தலைவர் நியமனம் பெற வுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இது குறித்து யாழ். மாவட்ட போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது இது தொடர் பாக தமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் ஆனால் இன்றுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் தனது பதவியிலிருந்து விலகுவார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் 19 கட்சிகள், 200 சுயேச்சை குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடை பெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக் கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று நண்பகலுடன் முடி வடைந்தது.

இந்தப் பொதுத்தேர்தலில் 19 அரசியல் கட்சிகள் போட்டியிடத் தகுதிபெற்றுள்ளன. இதேவேளை 200 சுயேச்சைக் குழுக்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளன.

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக் களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்ததை அடுத்து பிற்பகல் 1.30 வரை ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கமைய முன் வைக்கப்பட்ட எதிர்ப்புக்களை ஏற்றுக்கொண்டு 7 அரசியல் கட்சிகளினதும், 7 சுயேச்சைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 8 அரசியல் கட்சிகள், 2 சுயேட்சைக் குழுக்கள் யாழ்ப்பாண தேர்தல் களத்தில் குதித்தன!

யாழ்.மாவட்ட தேர்தல் களத்தில் 9 ஆசனங் களுக்காக எட்டு அரசியல் கட்சிகள் மற்றும் இரு சுயேட்சைக் குழுக்கள் உட்பட மொத்தம் 10 குழுக்கள் 120 வேட்பாளர்களைக் களத்தில் இறக்கியுள்ளன.

நேற்று ஈ.பி.டி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுயேட்சைக்குழு ஒன்றும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன. நண்பகல் 12 மணிமுதல் 1.30 மணிவரை கட்சிகளால் ஆட்சேபனைகள் செய்யப்பட்டு மாவட்ட தெரி வத்தாட்சி அலுவலரினால் அவை நிராகரிக்கப் பட்டன.

யாழ்.மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் தெரிவத்தாட்சி அலுவலரினால் ஏற்கப்பட்டன.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதிநாளான நேற்று ஏ.எஸ்.சுபியான் தலை மையிலான வேட்பாளர் பட்டியலை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கையளித்தது.

இந்தப் பட்டியலில் - காதர் இக்பால், எம். மன ஆப்தீன், எஸ்.முஹமட், எம்.ஆர்.நவாஸ்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 171 வேட்பாளர்கள் வவுனியா தேர்தலில்

(வவுனியா)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்

## நீதியான தேர்தல் இடம்பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்!

## மட்டக்களப்பில் 23 குழுக்கள் வேட்புமனுத் தாக்கல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 பதிவுசெய் யப்பட்ட கட்சிகளும், 8 சுயேட்சைக் குழுக்

# 171 வேட்பாளர்கள் வவுனியா தேர்தலில்

(வவுனியா)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வவுனியா மாவட்டத்தில் பத்து அரசியல் கட்சிகள், ஒன்பது சுயேட்சைக் குழுக்கள் உட்பட 171 வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஈ.பி.டி.பி, ஐக்கிய தேசியக்கட்சி, புளொட், ருகுணு மக்கள் கட்சி, பூமிபுத்திர கட்சி, ஹெல உறுமய, புதிய இடதுசாரி முன்னணி, எக்சத் சமாஜவாகி பக்சே ஆகிய பத்துக்கட்சிகளும், 9 சுயேட்சைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நீதியான தேர்தல் இடம்பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்!

## யாழ். அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகமான தேர்தலுக்கு உதவும் பாரிய பணி பத்திரிகைகளுக்கு உண்டு. பத்திரிகைகள் சரியான தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என யாழ். அரச அதிபர் பத்மநாதன் நேற்று பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான நேரம் முடிவடைந்த பின்னர் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் முதலானவற்றின் தலைவர்களுடன் சந்திப்பை நடத்திய பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது -

தேர்தல் காலங்களில் பிரச்சினைகளை உருவாக்கும் வகையிலான செய்திகளை தக்க முறையில் வெளியிட்டும், பிரச்சினைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் 23 குழுக்கள் வேட்புமனுத் தாக்கல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 பதிவுசெய்யப்பட்ட கட்சிகளும், 8 சுயேட்சைக் குழுக்களும் இம்முறை போட்டியிடுவதற்கான தேர்தல் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் சமாதான நீதிவான்களின் கையொப்பம் இல்லாமையால் அக்கட்சியின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக பெனடிக் பெனாண்டோவும், ஈ.பி.டி.பியின் முதன்மை வேட்பாளராக இராச மாணிக்கமும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஹக்கீமுக்கு கல்வீச்சு

அம்பாறை மாவட்டத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சென்ற வாகனத் தொடரணி கல்வீச்சுக்கு இலக்கானது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

அம்பாறை அரச செயலகத்தில் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக ரவூப் ஹக்கீம் வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் கிராமங்களூடாக வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். இவ்வாறு இவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு - புலிகள் ஓமந்தையில் நேற்று சந்திப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையில் வவுனியா - ஓமந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணித் தளபதி லலித், வவுனியா விளக்கு வைத்தகுளம் முன்னரங்க காவல்நிலையப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் வவுனியாப் பிரதிநிதி யார்லி மாட்டா மற்றும் அவரின் பிரதிநிதியும் கலந்து கொண்டனர்.

கடந்த 22 ஆம் திகதி வவுனியா விளக்கு வைத்த குளப்பகுதியில் இடம்பெற்ற சந்திப்பின் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# றொனி டி மெல் போட்டியிடவில்லை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் புதிதாக இணைந்து கொண்ட மாத்தறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் றொனி டிமெல் மற்றும் அவரது மனைவி, மல்லிகா டிமெல் ஆகியோர் இந்த பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை.

அதேவேளை றொனி டிமெல்லிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இடமளிக்கப்பட்டுள்ளது.

மல்லிகா டிமெல் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடளாவிய தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டது. (01)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...

# தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தேர்தலில் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவோம்

## பத்திரிகையாளர் மாநாட்டில் இளம்பரிதி



தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்தி தமிழர்கள் தங்களுடைய அரசியல் அபிலாஷைகளை சர்வதேசரீதியாக வெளிப்படுத்துவதற்கான ஒரு தீர்மானமாக இந்தத் தேர்தல் அமைகிறது.

இவ்வாறு, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகள் ஆரம்ப காலத்தில் இருந்து தேர்தல் பற்றிய தங்கள் நிலைப்பாட்டை தெளிவாகத் தெரியப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக இலங்கையில் இருக்கின்ற அரசியல் கூட்டமைப்புக்கள் தமிழினத்தை எல்லா விதத்திலும் பாதித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தேர்தல் என்பது வித்தியாசமான, யதார்த்தபூர்வமான சூழ்நிலையில் இடம்பெறுகிறது.

1976 ஆம் ஆண்டு முதன்முதல் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடு வட்டுக்கோட்டையில் நடந்தது. இந்த மாநாட்டில் தமிழ் அறிஞர்கள், ஆன்மீகத் தலைவர்கள், அரசியல், சமூகத் தலைவர்கள் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு தன்னாட்சி உரிமையை வெளிப்படுத்தியிருந்தனர்.

1976 ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்கள அரசுத் தலைவர்களுக்கு முன்னால் மதிப்புக்குரிய தந்தை செல்வா குறிப்பிட்டிருந்தார் - நாங்கள், சிங்களவர்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக, சமத்துவமாக வாழ விரும்புகின்றோம். ஆனால், அவர்கள் அடக்கியாள முற்படுகிறார்கள். அதற்கு எதிராக அகிம்சை வழியில் போராட முற்பட்டபொழுது ஆயுதமுனையில் அவர்கள் அழிக்க முனைகிறார்கள். எனவே, என்னால் அதை எதிர்த்து தொடர முடியாது. ஆனால், எமது அடுத்த சந்ததி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என்றார்.

எனவே, தந்தை செல்வா அரசியல் ரீதியாக எடுத்த அனைத்து நடவடிக்கைகளையும் இனவாதிகள் தோற்கடித்த பின் அவர்கள் அறிவுபூர்வமான கருத்தை முன்வைக்கின்றார்.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழமக்கள் தமிழீழத்துக்கு ஆதாரமாக ஆணை வழங்கினார்கள். அதுதான் தேர்தல் விஞ்ஞாபனம். அந்த அடிப்படையில் எங்களுடைய தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மக்களால் மக்களுக்காக ஒரு சுதந்திர ஆயுத விடுதலைப் போராட்டத்தை முன்வைத்தார்.

இன்று மூன்று தசாப்தங்களாக எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்று தமிழினம் யாராலும் அழிக்கப்படமுடியாத சக்தியாக நிலைப்படுத்தியுள்ளது. ஒரு படை பலத்தையும், ஒரு தேசிய பலத்தையும் எமது இனம் நிறுவியிருக்கின்றது.

அதற்காக 17 ஆயிரத்து 771 மாவீரர்களும், 82 ஆயிரம் மக்களும் தங்களை ஈகம் செய்திருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் சொதத்துக்கள், சுகங்களை இழந்து இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்து ஒரு உந்துசக்தியாக இருக்கின்றார்கள்.

இராணுவ பலத்தின் மூலம் இன்று தமிழினம் இராணுவ பலத்தை கட்டியமைத்ததன் மூலமும் இன்றைய சூழ்நிலையில் எதிர்காலத்தையும் தீர்மானிக்கின்ற நிலைமை இன்று தமிழினம் கொண்டிருக்கின்றது.

இந்த அடிப்படையில், இராணுவ பலத்தின் மூலம் தங்களை நிலைப்படுத்தியுள்ளது. ஒரு விடுதலைப் போராட்டத்தின் இலட்சியத்தை அடைகின்ற வழிகள் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று அரசியல் மற்றது இராணுவம்.

அரசியல் வழி மூலம் இழப்புக்கள் இல்லாமல், அழிவுகள் இல்லாமல் எங்களுடைய விடுதலையை அடைய விரும்புகிறோம். அந்த அடிப்படையில் இன்று அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அடிப்படையில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. அதன் முதற்கட்டமாக மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்ற முயன்றோம். ஆனால், மூன்று வீதம் கூட நிறைவேற்றப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் நிலையான நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் தமிழர் தரப்பில் ஒரு சர்வதேச ரீதியாக இருக்கின்ற மனித உரிமை அம்சங்கள், நிர்வாக விடயங்கள், அரசியல் அம்சங்கள் உள்ளடக்கிய எமது தேசத்துக்குப் பொருத்தப்பாடான சிங்கள மக்களைக் கௌரவிக்கின்ற, சிங்கள மக்களைப் பாதிக்காத தமிழ் மக்களின் தனித்துவத்தைப் பேணக்கூடிய ஒரு இடைக்கால வரைபை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம்.

அதை இலங்கை அரசுத் தலைமைகள் ஏற்றுச் செயற்படுமாக இருநதால், இலங்கைத் தீவில் மகிழ்ச்சி நிலவும்.

ஆனால், சிங்கள இனவாத அரசுத் தலைமைகள் அதற்கான இடத்தை ஏற்பாடு செய்யாமல் நாடாளுமன்றத்தில் இனவாதத்தைக் கிளப்பி இலங்கைத் தீவில் உள்ள தமிழினத்தை மட்டும் பாதிப்பதல்ல, சிங்கள மக்களையும் பாதிக்கின்ற அபாயகரமான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

அது மட்டுமல்ல, சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக்கும், விருப்புக்கும் எதிர்மாறாக சிங்கள மக்களின் விருப்புக்கு மாறாக, தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் ஆட்சிக் கலைப்பையும் செய்து மேலும் நெருக்கடியான நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் சரியான நிதானமாக போக்கை உறுதியாகக் கைக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்களில் மற்றும் சமூக, மனித மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.

இது உலக சமூகத்தினரால் வரவேற்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்துக்கு இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு புலிகள்தான் பிரச்சினை என்று கூறியவர்களே, இன்று இலங்கைத் தீவில் அமைதியைப் பேணுவதில் தடையாக இருப்பவர்கள் என உலகத்தால் உணரப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களுடைய அரசியல் அபிலாஷைகளின கொண்டிருக்கின்ற போராட்டங்கள் வலுப்பெற்றிருப்பதுடன், போராடும் சக்தியாக இருக்கின்ற விடுதலைப் புலிகள் பற்றிய நிலைப்பாடு சர்வதேச அந்தஸ்தில் உயர்ந்திருக்கிறது. இது தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் ஒரு முக்கிய திருப்புமுனையாகவும் அமைந்திருக்கிறது.

தவிர்க்கமுடியாது உருவான இந்தத் தேர்தலை தமிழர்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டிய நிலையில் இன்று இருக்கிறார்கள். ஏனெனில், இந்தத் தேர்தல் மூலம் இலங்கையில் உள் சார்ந்த ரீதியில் எதனையும் சாதிக்கமுடியாது போனாலும், சர்வதேச ரீதியாக தமிழரின் உரிமைப் போராட்டம் சர்வதேச ரீதியான தீர்மானத்துக்குள் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் தேர்தலானது தமிழர்கள் தரப்பில் முக்கியம் பெறுகிறது.

இந்த அடிப்படையில், தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்கள் அனைத்திலும் உள்ள மாவட்டங்களில் தமிழர் தரப்பு ஒன்றாக நின்று ஒரு தலைமையின் கீழ், ஒரு கூட்டமைப்பில், கொள்கை அடிப்படையில் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும் அபிவிருத்திக்கான மேம்பாடுகளையும் உள்ளடக்கக்கூடிய பொருத்தப்பாடான தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்து போட்டியிட முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

யாழ். குடாநாட்டு மக்களுடைய ஒன்றுபட்ட தீர்மானமாக - தமிழ்த் தேசியத்தின் தீர்மானமாக வெளிப்படும் என்பது ஒரு ஆணித்தரமான அரசியல் உண்மை.

எனவே, இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு தங்கள் விருப்பை மீண்டும் ஒரு முறை நிலைநிறுத்துகின்ற வாய்ப்பை அளிததிருக்கிறது. இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவளித்து நிற்கின்றோம்.

தமிழ் மக்கள் வரலாற்று ரீதியான இனவாத சக்திகளை சந்தர்ப்பவாத அரசியலால் - அழுகு தொழு நோயாளர்களைத் தூக்கி எறிந்து தங்கள் தனித்துவத்தை நிலைநாட்டி, அரசியல் சுதந்திர விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென வேண்டி நிற்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### தெல்லிப்பழையில் மாசி மக இலட்சனை

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மாசி மக இலட்சனை இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி அடுத்தமாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறும். மறுநாள் மாசி மகப் பெருநிகழ்வும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடாத்தும் 67 ஆவது தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு நாளைமறுதினம் பி.ப 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சின் அலுவலர் ம.செந்தூரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் கா.கமலநாதன் 'குருவருள்' என்ற பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினரால் 'தமிழோசை' எனும் மலர் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலக கேட்போர் கூடத்தில் பா.சிறிபவன் தலைமையில் இந்த மலர் வெளியீடு இடம்பெறும்.

இந்தமலரின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். இந்து நாகரிகத்துறை தலைவர் நாச்சியார் செல்வநாயகம் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்.

### கூட்டமைப்பின் பிரசாரம் நல்லூரில் ஆரம்பம்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வின் முதலாவது பிரசாரக் கூட்டம், நேற்று மாலை நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டமைப்பு வேட்பாளர்கள், தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் - ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர் வேட்பாளர் உட்படப் பலர் உரையாற்றினர். (111)


## சிறுவிளம்பரம்

### தொலைபேசிகள் தேவை

R.L.L தொலைபேசிகள் விற்பனைக்கு இருப்பின் கடித மூலமோ அல்லது நேரடியாகவோ உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு:- ம.நிமால், கும்பிளாவளை, அளவெட்டி. (640)

## ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம்

### பகிரங்க ஏல விற்பனை

ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம் தங்களுடைய திட்டத்தில் பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள இரண்டு வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளது.

1. Nissan Double cab pickup (1991) தொடர் இல: 250 - 6780
2. Nissan Double cab pickup (1990) தொடர் இல: 250 - 6901

இந்த வாகனங்களின் ஏல விற்பனை மூலமாகப் பெறப்படும் பணம், யாழ். அரச அதிபர் மற்றும் ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம் இணைந்து செயற்படும் நிதிக்கு நேரடியாக செலுத்தப்பட்டு அதனூடாக நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

ஏல விற்பனை நடைபெறும்:
திகதி: 15.03.2004 திங்கட்கிழமை
நேரம்: மு.ப. 10.00 மணி
இடம்: ஜி.ரி.இசற் - வடபுனரமைப்புத்திட்ட அலுவலகம், 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இவ் ஏல விற்பனை சம்பந்தமான மேலதிக விபரங்களை 472, பிரதான வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வாகனங்களையும் பார்வையிடலாம்.

ஆலோசகர்
23-2.2004 ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம்
(சி-2249)

## யாழ்ப்பாண மாநகரசபை

### பொது மக்களுக்கான ஓர் அறிவித்தல்

மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் பல வீதிகளில் பல்வேறு வகையான கட்டிடப் பொருட்கள், கழிவு இரும்புகள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றவை பொறுப்பற்ற விதத்தில் பொதுமக்களினால் போடப்படுவதினால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாகவும், வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகளாகவும் அமைந்துள்ளதனால் அவ்வாறான பொருட்களை எக்காரணம் கொண்டும் வீதிகளில் போடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ். நகர மக்கள் அனைவரையும் தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவறுவோருக்கு எதிராக நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்
(சி-2252)

### பொது மக்களுக்கான அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளைப் போட்டு இயந்திரம் மூலம் கூட்டெரு தயாரிப்பதற்கு பொருத்தமான 10 பரப்புக்குக் குறையாத நிலத்தினை நீண்ட கால குத்தகைக்கு பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகரசபை எல்லைக்குள் அல்லது அதனுடன் அண்டிய பகுதிகளில் இவ்வாறான காணிகளைக் குத்தகைக்கு விட விரும்புவோர் அதன் விஸ்தீரணம், அமைவிடம் என்பவற்றைக் குறிப்பிட்டு சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆணையாளர்
யாழ். மாநகரசபை
(சி-2251)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
ஜெமி
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00, (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
DUNGONS DRAEONS
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
சிலதினங்கள் மட்டும்
விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டிய ராஜன் நடித்த



எங்கள் அண்ணா
27 ஆம் திகதி முதல்
பார்த்திபன்; விக்னேஸ் நடித்த
சூரி
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2197)

# ஆனந்தசங்கரி கண்டகனவு தவிடு பொடியாகிவிட்டது!

## அரியநாயகம் சந்திரநேரு தெரிவிப்பு

(அம்பாறை)

'சக்தி ஒன்றின் பின்னணியில் இயங்கும் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆனந்தசங்கரி, நாம் அவரது காலடியின் சரணடைவோமெனக் கண்டகனவு, தமிழரசுக் கட்சி சார்பில் வேட்பு மனுத்தாக்கல் செய்ததன் மூலம் தவிடுபொடியாகியுள்ளது.'

இவ்வாறு தமிழரசுக் கட்சி சார்பில் திகாமடுல்ல மாவட்டத்தில் (அம்பாறை) பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தாக்கல்செய்த பின்னர், ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்த தலைமை வேட்பாளரும், முன்னாள் திகாமடுல்ல மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான அரியநாயகம் சந்திரநேரு கூறினார்.

நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்டச் செயலகத்தின் உதவி தேர்தல் ஆணையாளர் முன்நிலையில் இலங்கை தமிழரசுக்கட்டசியின் திகாமடுள்ள மாவட்ட பொதுத்தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

தலைமை வேட்பாளர் அ.சந்திரநேரு மற்றும் வேட்பாளர்களான ரெலோ நிர்வாகச் செயலாளர் சின்னத்தம்பி ஸ்ரீஸ்கந்தராசா, வீ.கல்யாணசுந்தரம் ஆகியோர் சகிதம் மாவட்டச் செலயலகத்திற்கு வருகைதந்து வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இதன்படி இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் திகாமடுள்ள தேர்தல் மாவட்டத்தில் -

அ.சந்திரநேரு (திருக்கோவில்), கனகசபை பத்மநாதன் (காரைதீவு), சாமித்தம்பி விவேகானந்தன் (திருக்கோவில்), சின்னத்தம்பி ஸ்ரீஸ்கந்தராசா (காரைதீவு), சீனித்தம்பி சுந்தரலிங்கம் (பொத்துவில்), சம்புநாதன் தினகரம்பிள்ளை (கல்முனை), தோமஸ் தங்கத்துரை வில்லியம் (பாண்டிருப்பு), திருமதி யோகாம்பிகை சபாபதி (கல்முனை), வேலுப்பிள்ளை கல்யாண சுந்தரம் (அக்கரைப்பற்று), இராசசேகரம் சிவகுமார் (வீரமுனை) ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

தலைமை வேட்பாளர் சந்திரநேரு ஊடகவியலாளர்கள் மத்தியில் மேலும் கூறுகையில்,

திகாமடுல்ல மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் இம்முறை நூறு வீதம் தமிழரசுக்கட்சியின் சின்னத்திற்கு வாக்களிப்பதன்மூலம், இரு ஆசனங்களைப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.



இம்முறை தமிழ் மக்கள் ஒருமித்த குரலில் வாக்களிக்கவேண்டும். இதற்கு விடுதலைப் புலிகளும் முழுக்க முழுக்க உறுதுணையாக இருப்பர்.

இதன்மூலம், தமிழ் மக்கள் நிறைவான வெற்றியைப் பெறமுடியும்.

அதேபோல் புலிகள்தான் தமிழர், தமிழர்தான் புலிகள் என்ற பிரகடனமும் சர்வதேசரீதியில் மேலும் அழுத்தம் பெறும்.

ஜே.வி.பி கட்சியினர் செய்வதையும், கூறுவதையும் சரியெனக் கூறிக்கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி. கட்சியினர் பற்றி எமது தமிழ் மக்களுக்கு எவ்வித அக்கறையுமில்லை.

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆனந்தசங்கரி பற்றி கூறுவதென்றால் - அன்றிருந்த சங்கரி இன்றில்லை என்றே கூறவேண்டும்.

ஏதோ ஒரு சக்தியின் தூண்டுதலில் இயங்கும் ஆனந்த சங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சின்னாபின்னாப்படுத்திவிட்டார்.

வீட்டுக்குள் பேசியதையெல்லாம் ரோட்டுக்கு கொண்டு வந்த சங்கரி கோட்டுக்கும் கொண்டு சென்றுவிட்டார்.

நாம் அவரது காலடியில் சரணடைந்தே தேர்தலில் குதிக்கவேண்டுமென அவர் கண்டகனவு, இன்று நாம் தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டதன்மூலம் தவிடுபொடியாகியுள்ளது.

எப்படியும் இப்போதுத் தேர்தலில் நாம் வடக்கு கிழக்கில் 22 அல்லது 23 ஆசனங்களை பெற்றுவரும் சக்தியாகவே திகழப்போகின்றோம்.

எனவே தமிழ் மக்களின் வாக்குரிமை பெற்ற அனைவரும் தவறாது வாக்களிப்பதன்மூலம், நமது உரிமைகளை வென்றெடுக்கவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரவும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் பக்கமே உள்ளனரென்பதை நிரூபிக்கவும் வழியேற்படும் என்றார். (07)

சட்டவிரோதமாக

# வெளிநாடு செல்லமுயன்ற 27 பேர் வத்தளையில் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாடு செல்லத் தயாராக இருந்த வடக்கு-கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 27 பேரை, வத்தளைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பெண்கள் எனவும், இவர்கள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதற்காக காத்திருந்ததாகவும், வத்தளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைதான ஒவ்வொருவரும் பயண முகவருக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை முற்பணமாகக் கொடுத்திருந்தாகவும், இவர்களிடம் எந்த ஆவணங்களும் இருக்கவில்லையென்றும் வத்தளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகளால் முஸ்லிம்களுக்கு தீர்வு எதுவும் கிட்டவில்லை

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகளால், முஸ்லிம்களின் எந்தவித பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தச்சமாதான முயற்சியினால், முஸ்லிம்கள் பல புதிய பிரச்சனைகளுக்கும் முகம்கொடுக்கவேண்டி ஏற்பட்டதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற, ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸ் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்ச்சிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜனாதிபதி, முதலில் தானே சமாதான முயற்சிகளை ஆரம்பித்ததாகவும், பிரதமர் ஆரம்பித்த புதிய சமாதான நடவடிக்கையில் முஸ்லிம்களின் எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்படவிலலை. ஏழரை வருடங்களாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் காலப்பகுதியில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து அரசாங்கத்தினை முன்னெடுத்துச் செனற வேளையில், தாமும் விடுதலைப் புலிகளுடன் இருதடவை சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டதாக குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்த சந்தர்ப்பத் திலும் - கிழக்கு முஸ்லிம்களையும், தென்பகுதி முஸ்லிம்களையும் தம்மால் பாதுகாக்க முடிந்ததாகவும் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில், கிழக்கில் எந்தவொரு முஸ்லிம்களையும் விரட்டியடிக்கத் தாம் அனுமதிக்கவில்லையென்றும் ஜனாதிபதி தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

# மனிதாபிமான கற்கைநெறி இராணுவ அதிகாரிகள் பூர்த்தி

(கொழும்பு)

ஆயுதப்படையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கான - சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மனித உரிமைகளும் என்ற பயிற்சி நெறியை முடித்த மூன்றாவது பிரிவினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, கடந்த 20 ஆம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரித்தானிய தூதரக உதவித்தூதுவர் பீற்றர் ஹில், இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் தாகூர் தியரி மேரட், கொழும்பு பல்லைக்கழக மனித உரிமைகள் நிறுவனத் தலைவர் ஜீவன் தியாகராஜா மற்றும் சிரேஷ்ட ஆயுதப்படை அதிகாரிகளும் கலந்துகொண்டதுடன், பிரதம விருந்தினராக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பங்குபற்றினார்.



லக்ஷ்மன் கதிர்காமர் உரையாற்றுகிறார்.

வவுனியா செயலகத்தில்

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல்!

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி.கூட்டான- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது வேட்புமனுவை வவுனியா அரச செயலகத்தில் தாக்கல் செய்தது.

இந்த முன்னணி, பிரேமரத்ன சுமதிபாலவை தலைமை வேட்பாளராகக் கொண்டு பின்வரும் வேட்பாளர்களை போட்டியில் நிறுத்தியுள்ளது.

ஆர்.எச்.உபாலி அமரசிங்க, திவாகர பியதாசே விமல்நாத், புஞ்சிலாகே சோமரத்ன, அப்துல்காதர் முகமட் நூன், மொகமட் அப்துல்கரீம் ரசீக், மீரா சாகிஜ் ரணீஷ், முகமது சித்தீக், முகமது கலீல், அப்துல் ஹமீட் சானூஸ் ஆகியோர் அடங்குகின்றனர்.

புதிய இடதுசாரி முன்னணி வேட்பாளர்களாக,

அந்தோனிப்பிள்ளை யேசுநேசன், பாக்கீர் முகமட் முஜிபூர் ரகுமான், ஜெயராஜா செல்வராஜா, கபிரியேற்பிள்ளை சிறில், சின்னையா எட்வேட் ஜெகநாதன், மேரியல் ஆனந்தப்பா, கடற்கரன் கணேஸ்வரன்முத்து, சிதமபரன் நடேசன், சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் ஆகியோரும்,

ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களாக,

நூர்தின் மசூர், அப்துல் பதூர்தீன் அப்துல் றிசாட், சாந்தகுமார புஞ்சிஹேறவா, மஹா துறகே ஜெயந்த பத்மலால், மகேஸ் தவச்செல்வம், இரங்கநாதன் பாக்கியநாதன், இராஜசுந்தரம் லொயிட் ஜெயசீலன், அப்துல் ஹமீட் முகமட், அப்துல் கதீர் சாகுல் ஹமீட் ஆகியோரும்,

ஜனநாயக மக்கள் விடுதலை முனணி (புளொட்) வேட்பாளர்களாக,

தர்மலிங்கம் - சித்தார்த்தன், கனகரத்தினம் சந்திரகுலசிங்கம், அப்துல் ரகுமான் முகமட், சின்னத்தம்பி கணேசலிங்கம், சரவணபவநாதன் ஜெகநாதன், இக்னேசியஸ் சிசில் ஜோன்சன், கந்தையா சிவனேசன், துரைசுவாமி சுந்தரராஜா, வீரப்பன் திருப்பதி ஆகியோரும்,

ஐக்கிய சோசலிசக் கட்சி வேட்பாளராக, எஸ்.செல்வமணி பிரதான வேட்பாளராகவும்,

ஜாதிக ஹெல உறுமய வேட்பாளர்களாக,

பதவிய சுமணசிறி, பட்டதுரே பஞ்ஞாதிஸ்ஸ, ஜெயசுந்தர ராகுலகினி, கனேகம ஞானகீர்த்தி, கல இட்டிய சுமணசிறி, பம்பரலான சுயாத லங்கா, மாவரல வத்தய கினி, உடுவன்கொட சதகினி, இலுவாவிசிய மேதாதந்த ஆகியோரும்,

சுயேட்சைக் குழு வேட்பாளர்களாக,

ஹமீத் முகமட் சலீம் பிரதான வேட்பாளர், அக்பர் முகமட் சாதிக் ஆகியோரும் போட்டியிடவுள்ளனர். (03)

# ஒற்றுமையை வலியுறுத்தக்கூடியதாக இந்தத் தேர்தல் அமையவுள்ளது

## செல்வம் அடைக்கலநாதன்

தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய தேர்தலாக இந்த தேர்தல் வந்திருக்கிறது. ஒரு குடையின்கீழ் தமிழ்த்தரப்பு ஒன்றிணைநதிருக்கிறது. இந்தத் தேர்தல் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் என்று- இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதியின் முதன்மை வேட்பாளரும், ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தென்னிலங்கையும், உலகமும் எமது தமிழ் மக்களின் எழுசசி வாக்குகளால் நிச்சயமாக எமது தமிழ்ச் சமூகம் ஒற்றுமையாக, ஒரு குடையின்கீழ் உள்ளனர் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எமது மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய ஒரு தீர்வைப் பெறவேண்டும் எனில், எமது மக்கள் அனைவரும் ஒரு குடையின்கீழ் வாக்களிக்கவேண்டும் என்று கேடடுக்கொள்கிறேன். நிச்சயமாக நாங்கள் கூடுதலாக ஆசனங்களைப் பெறுவோம். யார் ஆட்சி அமைப்பது என்பதை தீர்மானிக்கும் சக்தியாக நாம் அமைவோம் என்பதனை உறுதியாகவும், ஆணித்தரமாகவும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உழைககும் என்பதனையும் இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சி அமைக்கும் சக்தியாக நீங்கள் வந்தால், அமைச்சுப் பதவிகளை பெறுவீர்களா என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, நிச்சயமாக நாம் ஒருபோதும் பெறமாட்டோம். தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை எந்தவொரு அமைச்சுப் பதவிகளையும் நாம்பெறமாட்டோம் எனக் கூறினார். ஒருவேளை உங்களின் கோரிக்கையை இரு கட்சிகளும் ஏற்கவில்லை எனில், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? என்று கேட்டபோது, நிச்சயமாகப் போர்தான் அதனை தீர்மானிப்பவர்கள் தென்னிலங்கை அரசியல் தலைவர்களாகத்தான் இருப்பார்கள் எனவும் அவர் கூறினார்.

# ஐ.தே.கட்சி ஆட்சியமைத்தால் ஜனாதிபதி அதைக் கலைப்பார்

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படக்கூடிய கட்சியையே மக்கள் இந்த தேர்தலில் தெரிவுசெய்ய வேண்டும். இதன் மூலமே ஆட்சி அமைக்கும் அரசு ஆறுவருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சிநடத்த முடியும்.

இவ்வாறு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்ட மாவட்டத்திற்கான வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டு ஊடகவியலாளருடன் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

சந்திரிகா பண்டாரநாயக்க இன்னும் இரண்டு வருடங்கள் நாட்டின் தலைவியாக இருப்பார். அரசியல் அமைப்பில் ஜனாதிபதிக்கு இருக்கும நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி, தேர்தல் முடிந்து ஒரு வருடத்தின்பின் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி புதிதாக அமைக்கப்படும் அரசாங்கத்தை கலைக்க முடியும்.

இந்தநிலையில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைக்குமானால், மீண்டும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம்.

அத்துடன், முக்கிய அமைச்சுப் பதவிகளையும் பறிக்கலாம். இதன் மூலம் இருவருக்கும் இடையில் முறுகல் நிலை அதிகரிக்கலாம். இதனால், நாட்டில் குழப்பநிலை ஏற்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகள் சுப்ப லீக் போட்டிகளில் வெற்றி!

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19 வயதிற்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது சுப்பலீக் போட்டியில் சிம பாப்வே அணியை எதிர்த்து விளையாடிய பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் சிம்பாப்வேயை துடுப்பெடுத்தாட அழைத்தது. இந்த அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கமரொன் 68 ஓட்டங்களையும், மவோயோ 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்ததால் 47.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மட்டுமே சிம்பாப்வே பெற்றது.

பாகிஸ்தான் வீரர்கள் பந்துவீச்சில் தாரிக் ம.்மூத் 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், மந்தூர் அம்ஜட் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் அணி, ஒரு ஓட்டத்தைப் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தபோதும், லதீப் 84 ஓட்டங்களையும், அலி 43 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றதன் மூலம் வெற்றி இலக்கான 143 ஓட்டங்களைப் பாகிஸ்தான் அணி பெற்றது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக காலித் லதீப் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் டாக்காவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், இங்கிலாந்து அணி 97 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 306 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணி சார்பாக கூக் ஆட்டமிழக்காமல் 108, பட்டேல் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் பொபாரா 40, டேவிஸ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பைண்ட்லே, மைக்கே இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

307 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடத்தொடங்கிய நியூசிலாந்து - 42.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இந்த அணி சார்பாக



ஹேரி 49, வில்சன் 32, ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றபோதும் மற்றைய எவரும் ஆட்டத்தில் சோபிக்கவில்லை. பந்துவீச்சில் பிறஸ்னென், பிளங்கெற், பட்டேல், ஹைட், லோசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# நியூஸிலாந்து, தென்னாபிரிக்க அணிகளின் நேற்றைய போட்டி இன்று நடைபெறும்!

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்று நடைபெறவிருந்த நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டி கடும் மழை காரணமாக இன்று ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தார். இந்த நிலையில் அங்கு கடும் காற்றுடன் கூடிய மழை ஆரம்பித்தது.

இதனால், காலநிலை சீராகும் என, மத்தியஸ்தர்கள் சுமார் 3 மணித்தியாலம்வரை காத்திருந்தனர். ஆனால், அது சாத்தியமற்றுப் போகவே, இன்றைய தினத்திற்கு போட்டி ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, நியூஸிலாந்து அணியின் முன்னணி பந்துவீச்சாளரான ட்ரல் ரபி முழங்காலில் காயமேற்பட்ட காரணத்தினால் விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக மற்மாசன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

காயம் காரணமாக விளையாடாமல் இருந்த தென்னாபிரிக்க அணியின் லான்ஸ் குளுஸ்னர், றுடோல்ப் இருவரும் பொலக், அஸ்வல் பிறின்ஸ் இருவருக்காகவும் விளையாடவுள்ளனர்.

# விளையாட்டு

# மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி ம.ம. அணி சம்பியன்!

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவந்த மென்பந்து கிரிக்கெட் இறுதியாட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை 5 விக்கெட்டுக்களால் நெல்லியடி ம.ம.வி வெற்றிகொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 40 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நெல்லியடி ம.ம.வி. வீரர் குலராஜ் சிறப்பாகபந்துவீசி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி அணி 5 விக்கெட் இழப்பிற்கு 44 ஓட்டங்களைப் பெற்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. நெல்லியடி ம.ம.வி வீரர் குலராஜ் 15 ஓட்டங்களையும், சுரேஸ் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஹாட்லிக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்தப்போட்டிகள் யாவும் திக்கம் இ.வி.கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டிக்கு வா.திருக்குமரன் ம.அஜந்தன் ஆகியோர் மத்தியஸ்த்தம் வகித்தனர்.(12)

## இடைக்காடு மகாவித்தியாலயம் முதலிடம்

யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலை மென்பந்து கிரிக்கட் அணிகளுக்கிடையே கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் அடிப்படையில் முதலாம் இடத்தை இடைக்காடு மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை உரும்பிராய் இந்துக்கல்லூரியும், மூன்றாம் இடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரியும் பெற்றுள்ளன. கோப்பாய் கோட்டத்தில் முதல் இரண்டு இடங்களினை பெற்ற மென்பந்து கிரிக்கெட் அணிகள் யாழ்வலய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.(58)

## நல்லூர் கோட்ட மென்பந்து போட்டி முடிவு

யாழ். வலயத்துக்குட்பட்ட நல்லூர்க் கோட்ட பாடசாலைகளின் மென்பந்து கிரிக்கட் அணிகளுக்கிடையில் ஸ்ரான்லிக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவந்த மென்பந்து கிரிக்கட் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சுற்றுப் போடடியில் முதலாம் இடத்தை யாழ்.இந்துக்கல்லூரியும், இரண்டாம் இடத்தை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயமும் மூன்றாம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்று வலய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. (58)

# தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் ஐந்தாம் நாள் போட்டியின் முடிவுகள்!

மூன்றாவது தமிழீழ தேசியப் பெருவிளையாட்டு விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

தேசியக் கொடியினை தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ராதா ஏற்றிவைத்தார்.

துடுப்பாட்ட நடுவர்களான செல்வராசா, ஜேக்கப், அம்பாறை மாவட்டத் துடுப்பாட்டப் பயிற்றுனர் குமார், மட்டக்களப்பு தாச்சியணித் தலைவி சுஜா, அம்பாறை வலைப்பந்து வீராங்கனை கினோஜா, யாழ் கரப்பாந்தாட்ட வீராங்கனை யசோதா, வவுனியா கபடியணித் தலைவி அமுதா, மட்டு - அம்பாறை விளையாட்டுத்துறை இணைப்பாளர் நிமலன், தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த கிருபாகரன் ஆகியோர் மாவீரர் திருவுருவப் படங்களுக்கு ஈகச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின கபடி விளையாட்டுப போட்டியில் வவுனியா அணி யாழ். மாவட்ட அணியை 1:6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் மன்னார் அணி திருமலை அணியை 28:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிகொண்டது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக யஸ்ரின், நிமலசேன, அபயகுணசேகர ஆகியோர் கடமையாற்றினர்.

துடுப்பாட்டப் போட்டி அம்பாறை, திருகோணமலை அணிகளுக்கிடையே நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அம்பாறை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

30 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 150 ஓட்டங்களை அம்பாறை அணி பெற்றது.

அணியின் தலைவர் றியாத் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களைப் பெற்றார். 06 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் என்பன இவற்றில் அடங்கும். ஓவரின் இறுதிப்பந்திலும் ஒரு பவுண்டரியை இவர் பெற்றார். இந்த அணி சார்பாக நியாஸ் 32, சக்தீன் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சிறீமன் 04, லக்ஸ்மன் 04 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருமலை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களைப் பெற்றது. மிகவும் பரபரப்பான முறையில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது அம்பாறை அணி. பார்த்தீபன் 38 ஓட்டங்களையும், அச்சுதன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மதன், சிறாக் இருவரும் தலா இரண்டு விக்கெட் டுக்களை கைப்பற்றினர்.

நாளை நடைபெறும் அரை இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு அணியுடன் அம்பாறை அணி மோதும்.

இன்றைய அரையிறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா அணிகள் மோதவுள்ளன.

இந்தப் போட்டியின் நடுவர்களாக கேச்சிம், செல்வராசா ஆகியோரும் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தொலைக்காட்சி நடுவராக முருகவேலும் கடமையாற்றினர்.

ஆண்களுக்கான தாச்சி சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு அணி சமுகம் தராத காரணத்தால், கிளிநொச்சி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. கிளிநொச்சி - முல்லை அணிகளுக்கிடையேயான பெண்களுக்கான தாச்சி சுற்றுப்போட்டியில், முல்லை அணி 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கிளிநொச்சி அணியை வென்றது.

இந்தப்போட்டிகளின் நடுவர்களாக பீ.ஜெயவிந்தன், சி.த.கணேசலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.


மின்னொளியில் நடந்த ஆண்களுக்கான கரப்பந்தாட்டபோட்டியில் வவுனியா அணி, முல்லை அணியை 3:1 என்ற செற் கணக்கில் வென்றது. (108)

# யாழ்.கோட்ட மென்பந்து கிரிக்கெட் மத்திய கல்லூரி அணி வெற்றி!

யாழ்ப்பாண கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கடந்தவாரம் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியில் அடிப்படையின் முதலாம் இடத்தை யாழ். மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொழும்புத்துறை ஜோசப் வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும் பெற்று வலய மட்ட போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (58)

# பீஹார் சிறையுடைப்பில் 13 கைதிகள் தப்பினர்!



இந்தியாவில் பீஹார் மாநிலம் சாப்ரா நகரில் உள்ள மாவட்ட சிறையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சில கைதிகள் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இதனால் சிறைக்குள் இருந்த கைதிகள் நாலாபுறமும் சிதறி ஓடினர். குண்டு வெடித்த இடத்துக்கு சிறை அதிகாரிகள் விரைந்தபோது சிறைக்குள் புகை மண்டலமாக இருந்தது.

சிறைக்குள் கலவரம் நடப்பதுபோல் பெரும் குழப்பமாக இருந்தது. இந்த சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு 13 கைதிகள் மூங்கில் ஏணிமூலம் மதில் சுவரில்ஏறி வெளியே குதித்துத் தப்பி ஓடினர்.

தப்பி ஓடிய கைதிகள் பிரபல ரவுடிக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள். இந்தக் குண்டு வெடிப்பில் சிறை அதிகாரி ஒருவரும், 2 கைதிகளும படுகாயமடைந்தனர்.

# ராஜீவ் கொலை வழக்கு; சாட்சி கொல்லப்பட்டாரா?

## சி.பி.ஐ. விசாரணைக்கு கோரிக்கை

ராஜீவ்காந்தி கொலைவழக்கின் சாட்சிகளில் ஒருவர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து சி.பி.ஐ விசாரணை நடத்தவேண்டும் என்று கோரி புதுடெல்கி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கு நடவடிக்கை குழுவின் தலைவர் ரமேஷ்தலால், இந்த கொலை வழக்கை விசாரிக்கும் ஜெயின் கமிஷனின் விசாரணையில் ஒரு சாட்சியாகவும் இடம்பெற்றுள்ளார்.

ரமேஷ்தலால் ராஜீவ்காந்தி கொலைச்சதி குறித்து புதுடெல்கி உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது-

ராஜீவ்காந்தி கொலை சதி வழக்கின் முக்கிய சாட்சிகளில் ஒருவரான ராஜேந்தர் ஜெயின் தனது காரில் வெடிகுண்டு கொண்டு சென்றதாக புதுடெல்கி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார். ஆனால், பின்னர் அவரைக்காணவில்லை. அவர் காணாமற் போனவர்களின் பட்டியலில் இருப்பதாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். ஆனால் ராஜேந்தர் ஜெயின் கொலை செய்யப்பட்டுள்ளார். ராஜீவ்காந்தி படுகொலை சதி பின்னணியில் சந்திரா சாமிக்கு உள்ள தொடர்புபற்றி அவர் அம்பலப்படுத்தி விடக்கூடும் என்பதற்காகவே அவர் கொலை செய்யப்பட்டார். எனவே இதுபற்றிய விசாரணையை புதுடெல்கி பொலிஸாரிடமிருந்து சி.பி.ஐக்கு மாற்றவேண்டும.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

உயர்நிதிமன்ற நீதிபதி பி.என்.சதுர்வேதி முன்னிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மனுமீது விசாரணை நடத்திய நீதிபதி இந்த வழக்குத் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம், சி.பி.ஐ இயக்குனர், டெல்கி பொலிஸ் ஆகியோருக்கு அழைப்பு அனுப்ப உத்தரவிட்டார்.

# அ.தி.மு.க வேட்பாளர் பெயர்கள் அறிவிப்பு!

வரும் மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.கவின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை முதல்வர் ஜெயலலிதா நேற்று அறிவித்தார். கடந்தமுறை எம்.பியாக இருந்தவர்களில் இரண்டு பேருக்கு மட்டுமே மீண்டும் போட்டியிட இடம் வழங்கப்பட்டுள்ளது.

சசிகலாவின் சகோதரி மகன் டி.டி.வி.தினகரன் மீண்டும் பெரியகுளத்திலேயே போட்டியிடுகிறார். தென்காசியில் கடந்தமுறை போட்டியிட்டு எம்.பியான எஸ்.முருகேசனும் அதே தொகுதியில் திரும்பவும் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடந்த தேர்தலில் போட்டியிட்டு எம்.பிக்களாக இருந்த திண்டுக்கல் சீனிவாசன், பி.எச்.பாண்டியன், மலைச்சாமி, முன்னாள் அமைச்சர் செல்வகணபதி, சரோஜா ஆகியோருக்கு இந்தமுறை ஜெயலலிதா இடம் வழங்கவில்லை. கட்சியின் அமைப்புச் செயலாளரான ஓ.எஸ்.மணியனுக்கு இந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை காங்கிரஸ் எம்.பி.மணிசங்கர அய்யரை நடுரோட்டில் ஆள் வைத்து அடித்ததில் முக்கிய பங்கு வகித்த இவரை மயிலாடுதுறையிலேயே போட்டியிட வைத்துள்ளார் ஜெயலலிதா.

பின்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

1. 2002 ஒக்ரோபர் 1 ஆம் திகதியன்று யமால்ரின் நிறுவனத்தில் சேர்ந்தார்.
2. பொறித்தொகுதியானது 2002 எப்பிரல் 1 ஆம் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்டு, 2002 மே 1 ஆம் திகதியன்று தொழிற்பாட்டில் விடப்பட்டது.
3. குத்தகையானது வருடம் 2032 மார்ச் 31 ஆம் திகதியன்று காலாவதியாகிறது.
4. காசுமீதியானது 2003 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வியாபாரப் பயணங்கள் சம்பந்தமாக ரொக்கியால் அவருக்குச் செலவான தொகையான ரூபா 12,000 தையும் உள்ளடக்கியது.

வேண்டப்படுவது:
நல்ல கணக்கீட்டு வழக்கத்திற்கு ஏற்றவாறு உமது கணிப்புக்களை விபரமாகக் காட்டி நிறுவனத்தின் ஐந்தொகையை மீண்டும் வரைக.

02) அ. செலவுகள், வருமானங்கள் போன்றவற்றின் தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில், நிறுவனத்தின் இலாபத்தை அல்லது நட்டத்தை அறியமுடியுமா?

ஆ). பின்வரும் தனிப்பட்ட வியாபாரங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு தொகைகள் தவறவிடப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்துத் தருமாறு உம்மிடம் கேட்கப்பட்டுள்ளது.

| வியாபாரம் | மொத்தச் சொத்துக்கள் | மொத்தச் பொறுப்புக்கள் | உரிமையாளர் உரிமை | மொத்த வருமானம் | மொத்த செலவுகள் | தேறிய இலாபம் /நட்டம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| சங்கர் | 100 000 | 52 000 | ? | 104 000 | ? | 36 000 |
| காமா | 180 000 | ? | 114 000 | 166 000 | 128 000 | ? |
| லொக்கு | ? | 108 000 | 114 000 | 190 000 | ? | (20 000) |
| அல்பா | 90 000 | ? | 42 000 | ? | 46 000 | (16 000) |
| சில்வா | ? | 72 000 | 112 000 | ? | 64 000 | 50 000 |

இ) லலித் முயற்சிகள் நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விபரங்கள்:

| | குறிப்பிட்ட காலத்தொகைகள் 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| ஆரம்பத் தொக்கு | 60 000 | 76 000 | 72 000 | 88 000 |
| தேறிய கொள்வனவுகள் | 240 000 | 204 000 | 160 000 | 172 000 |
| விற்கவிருந்த சரக்கின் கிரயம் | 300 000 | 280 000 | 232 000 | 260 000 |
| இறுதித் தொக்கு | (80 000) | (76 000) | (92 000) | (68 000) |
| விற்சரக்கின் கிரயம் | 220 000 | 204 000 | 140 000 | 192 000 |

பின்வரும் பிழைகளை நிறுவனம் விட்டுள்ளது. தற்போது தெரியவந்தது.

| காலம் | தொக்கில் | பிழைகள் |
|---|---|---|
| 1 | குறைந்தது | 10 000 |
| 2 | கூடியது | 14 000 |
| 3 | குறைந்தது | 22 000 |

வேண்டப்படுவது:
1. தனித்தனியே சரியான விற்சரக்கின் கிரயத்தைக் கணிக்குக.
2. இத் திருத்தத்தால் மொத்தலாபத்தில் ஏற்படும் மாற்றம் யாது? (மொத்தமானது)

ஈ) 2002 ஜூ ன் மாதத்திற்குப் பொன்சேக்கா என்பவரது வணிகத்தின் தகவல்கள் பின்வருமாறு. அவரின் வணிகத்தில் 1 ஜூ னின் கடன்பட்டோர் மீதிகளாக சி. அப்துல் ரூபா 720 உம், டி. கமல் ரூபா 960 உம், எம். கென்றி ரூபா 1440 உம், பி. சுல்த்தான் ரூபா 600 உம் காணப்பட்டன. அத்துடன் பின்வரும் நாளேடுகளும் காணப்பட்டன.

விற்பனை நாளேடு — பக்கம் 18

| திகதி | பட்டியல் | கணக்கு | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2/6 | 603 | ஆர். றோய் | 520 |
| 6/6 | 604 | சி. அப்துல் | 240 |
| 7/6 | 605 | டி. கமல் | 500 |
| 15/6 | 606 | எம். கென்றி | 400 |
| 25/6 | 607 | கே. பண்டா | 380 |

காசுப்பெறுவனவு — பக்கம் 12

| திகதி | கணக்கு | காசு (ரூபா) | கடன்பட்டோர் (ரூபா) |
|---|---|---|---|
| 5/6 | சி. அப்துல் | 300 | 300 |
| 10/6 | டி. கமல் | 800 | 800 |
| 23/6 | எம். கென்றி | 760 | 760 |
| 27/6 | பி. சுல்த்தான் | 500 | 500 |

நன்றி
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

01. கடந்த வருடம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற உங்களுக்குத் தெரியுமா? அறிவுக் களஞ்சியப் போட்டியில் வெற்றிபெற்ற கண்டி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பெற்ற புள்ளிகள் கீழே வரைபு காட்டுகிறது.

| பெயர் | பெற்ற புள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|
| தர்சினி | 𝍸 𝍸 𝍸 𝍸 ǁ | 22 |
| கீதா | 𝍸 𝍸 𝍸 𝍸 𝍸 | 25 |
| தருமிளா | 𝍸 𝍸 𝍸 𝍸 𝍸 𝍸 | 30 |
| மேனகா | 𝍸 𝍸 𝍸 | 15 |
| மைதிலி | 𝍸 𝍸 𝍸 𝍸 ǁ | 22 |

1. கீதா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கையை வரைந்து காட்டுக. ................................
2. அதிக புள்ளிகள் பெற்ற மாணவி யார்? ................................
3. சமமான புள்ளிகள் பெற்ற இரு மாணவிகளும் யாவர்? ................................
4. கண்டி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பெற்ற மொத்த புள்ளிகள் எத்தனை? ................................
5. குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவிக்கும் அதிக புள்ளிகள் பெற்ற மாணவிக்கும் இடையிலுள்ள புள்ளி வித்தியாசம் எவ்வளவு? ................................
6. பெற்ற புள்ளிகள் அடிப்படையில் அவர்களின் பெயர்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக. ................................
7. இந்தப் போட்டிகள் ஆரம்பிக்கும்போது நேரம் 9.20. நிறைவுறும் நேரம் 10.45. போட்டி முடிவடைய எவ்வளவு நேரம் எடுத்தது? ................................
8. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துள்ளசொல் எழுதுக?
   1. வருடம்......................
   2. வெற்றி......................
9. 'போட்டியில்' என்ற சொல்லின் பன்மைச் சொல் ................................
10. ஆண்பால் சொற்களில் எழுதுக.
    1. மகளிர்......................
    2. மாணவிகள்......................

02. கழே 'அ' பகுதியிலுள்ள உபகரணங்களின் பெயர்களை எவ்வேலைகளுக்குப் பயன்படுத்தலாம் என்பதை 'ஆ' பகுதியில் இருந்து தெரிவுசெய்து 'இ' பகுதியின் எழுத்தை சதுரத்தினுள் எழுதுக.

| அ | ஆ | இ |
|---|---|---|
| 1. தொலைநோக்கி | .......... | A. தொலைவிலுள்ள ஒருவருடன் பேசுவதற்கு |
| 2. ஏர் | .......... | B. பலகை அறுப்பதற்கு |
| 3. மழை மானி | .......... | C. சங்கீதம் வழங்கு வதற்கு |
| 4. தூக்குக் குண்டு | .......... | D. பெரிதாக்கப் பார்ப்பதற்கு |
| 5. தொலைபேசி | .......... | E. வயல் உழுவதற்கு |
| 6. தாளம் | .......... | F. மழையை அளப்பதற்கு |
| 7. எக்ஸ்றே யந்திரம் | .......... | G. உணவைப் பொரிப்பதற்கு |
| 8. வாள் | .......... | H. தாளத்தைக் காப்பதற்கு |
| 9. வீணை | .......... | I. உடம்பின் உற்பத்தியை பார்ப்பதற்கு |
| 10. தொலைக்காட்சி | .......... | J. காற்று வீசும் திசையை அறிய |
| 11. தாச்சி | .......... | K. துளை இடுவதற்கு |
| 12. திசை அறிகருவி | .......... | L. ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் பார்க்க |

03. பின்வரும் தமிழ் சொற்களை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதுக.

| தமிழ் | சிங்களம் | ஆங்கிலம் |
|---|---|---|
| பாடசாலை | .................. | .................. |
| வகுப்பு | .................. | .................. |

04. கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள சில சொற்கள் எழுத்துப் பிழையாக உள்ளன. அவற்றைத் தெரிவுசெய்து சரியான சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

நாம் கல்விச் சுற்றுலா சென்றவேளை அங்கு போயிருந்தோம். தூரத்தில் நின்று பார்த்தபோது ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போலக் காட்சியழித்தது. அருகில் சென்றபோதுதான் உன்மையான அமைப்பைக் கண்டுகொண்டோம். நான் அசிரியரின் கையைப்பிடித்துக்கொண்டு மலையில் ஏறினேன்.

1. .................. 2. ..................
3. .................. 4. ..................
5. ..................


05. நுளம்புகள் எவ்வாறு பெருக்கமடைகின்றன என்பது பற்றிய சில கட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி 1, 2, 3, 4, 5, 6 என்னும் இலக்கங்களைக்கொண்டு பூர்த்தி செய்க

1. ☐ முட்டையிலிருந்து குடம்பி வெளியேறும்.
2. ☐ செட்டை கழற்றி கூட்டுப்புழுவாகும்.
3. ☐ பெண் நுளம்பு நீரில் முட்டை இடும்.
5. ☐ கூட்டுப்புழு கவசம் வெடித்து நுளம்பாகும்.
6. ☐ மூன்று நாட்களின் பின் முட்டை வெடிக்கும்.
7. ☐ குடம்பி நீரிலுள்ள நுண்ணங்கிகளை உண்ணும்.

06. பின்வரும் சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதுக.


1. மரணமடைந்தார் ..............................
2. வாரியணைத்தார் ..............................
3. கூடி + இருந்தார்கள் ..............................
4. கோபம் + அடைந்தது ..............................
5. கல் + எறிந்தான் ..............................

07. சுருக்கமான விடை தருக




1. இந்தச் செவ்வக வடிவத்தின் சுற்றளவு யாது? ..............................

2. இவ்வட்டங்களில் நிழற்றப்பட்டுள்ள பின்னங்களை எழுதுங்கள்




1................ 2................ 3................

3. அப்பின்னங்களை ஏறுவரிசைப்படுத்துங்கள்

...............................................

4. 12.5+4.87 = ..............
5. 3/8+2/8 ..............

6. கீழே எண்சட்டங்களில் காட்டப்பட்டுள்ள எண்களை இலக்கங்களில் எழுதுக.




..................

7. அவ்வெண்களைச் சொற்களில் எழுதுக.

...............................................

8. 1 நாள் 6 மணித்தியாலம் எத்தனை மணித்தியாலம்.

...............................................

08. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிச்சொல்லைக் கூட்டுக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

1. தாய், தந்தை, ஆசான், அண்ணன், அரசன் என்போர்
...............................................
2. நான்கு புறங்களாலும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி
...............................................
3. விபத்துக்குள்ளாகிய ஒருவருக்கு உடனடியாக அளிக்கப்படும் சிகிச்சை
...............................................
5. இருபத்தைந்து ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா
...............................................

(ஐங்குவர், முதலுதவி, தீவு, வெள்ளிவிழா)

09. வகைப்படுத்துக.
(யானை, கிளி, சிங்கம், புலி, மாடு, நாய், முயல், காகம், கரடி)

தாவரம் மட்டும்
..............................
..............................
..............................

மாமிசம் மட்டும்
..............................
..............................
..............................

தாவரம், மாமிசம் இரண்டும்
..............................
..............................
..............................

10. சரியாயின் சரியெனவும், பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1. இலங்கையின் தேசிய மரம் நாகமரம் ஆகும். (.....)
2. இலங்கையின் ஏற்றுமதிப்பயிர்கள் நெல், மா, வாழை என்பனவாகும். (.....)
3. தமிழ்மொழியிலுள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு ஆகும். (.....)
4. வாழை இருவித்திலைத்தாவரம். (.....)

11. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமானவற்றை நிரப்புக.

1. அச்சாணி இல்லாத தேர் ................ இப்பழமொழியைப் பூர்த்திசெய்க.
2. 1,3,5,7,9 என்பன .............. எண்களாகும்.
3. பெருநூலோடி ................ தையல்களில் ஒன்று.
4. கரம் .............. விளையாட்டுக்களில் ஒன்றாகும்.
5. சாதாரண மனிதனின் பற்களின் எண்ணிக்கை ............ ஆகும்.
6. வாள், சீவுளி, உளி போன்ற உபகரணங்கள் ............ தொழிலுக்குப் பயன்படுகின்றன.

12. நான் பாடசலைக்குச் சென்றபோது என்னும் தலைப்பில் வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலைகள் கொண்டதாகவும் இருத்தல்வேண்டும்.

1. ...............................................
...............................................
2. ...............................................
...............................................
3. ...............................................
...............................................
4. ...............................................
...............................................
5. ...............................................
...............................................
6. ...............................................
...............................................

(தொடரும்...)

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2003 மார்ச்

## கணக்கீடு

01) அ) கீழே தரப்பட்டுள்ளவை உண்மையானதா அல்லது பொய்யானதா என்பதைக் குறிப்பிடுக. விடையளிக்கும்போது வினாக்களின் இலக்கத்திற்கு எதிரே உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் குறிப்பிட்டால் போதுமானது.

1. பங்குடமையின் இலாப, நட்டங்கள் பங்காளர்களுக்கிடையே எப்போதும் பங்கிடப்படுவது அவர்களுடைய இலாப பகிர்வு விகிதத்தின் விகிதாசாரப்படியாகும்.
2. பங்குடமை வியாபாரத்தை நடாத்தும்போது இலாபமீதியை உறுதிப்படுத்திப் பிரிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு பங்காளருக்கும் அவரது மூலதனத்தின் மீதான வட்டியை வைத்தல் அவசியமாகும்.
3. ஒரு பங்குடமையில் பிறவாறு இணங்கிக்கொள்ளப்பட்டாலன்றி, பங்காளர்கள் ஒவ்வொருவரும் தத்தம் மூலதனக்கணக்கில் வைத்துள்ள தொகைகள் எவ்வாறிருப்பினும், இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்வதற்கு உரித்துள்ளவராவார்.
4. ஒவ்வொரு பங்காளியும் பங்குடமையின் ஒரு முகவராவார்,

— இங்கே மடிக்கவும் —



ஆதலால் பங்குடமையின் பேரில் பங்காளி ஒருவரால் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம், மற்றப் பங்காளிகளையும் கட்டுப்படுத்துகிறது.

ஆ) பங்குடமைக் கணக்குகள் தொடர்பில் பின்வரும் சோடிப் பதங்கள் ஒவ்வொன்றுக்குமிடையிலான ஒவ்வொரு பிரதான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

1. பங்காளரின் மூலதனக் கணக்கும் பங்காளரின் நடைமுறைக் கணக்கும்
2. இலாபநட்டப் பகிர்வுக் கணக்கும் நடைமுறைக் கணக்கும்.
3. பங்காளரும் பங்குதாரரும்.

இ) இக்பால், பண்டா பங்குடமையின் தொடக்கமாகிய 2002 ஆம் ஆண்டில் மூலதனம் முறையே ரூபா 60000, ரூபா 90000 ஆகும். பின்வரும் நிபந்தனைகளுக்கமைய கீழ்வரும் நிரல்களில் பங்குடமையின் தேறிய இலாபம் எவ்வாறு பிரிக்கப்படும் எனக் குறிப்பிடுக. (மூலதனத்தின் கழிக்கும் சந்தர்ப்பம் ஏற்படின் அதை அடைப்பில் ( ) இடுக)

| நிலைமை 1 : தேறிய இலாபம் ரூபா 60000. | | |
|---|---|---|
| பங்குடமையின் ஒப்பந்தத்தில் உள்ள தகவல்கள் | இக்பால் ரூபா | பண்டா ரூபா |
| அ) தேறிய இலாபம் தொடக்க மூலதன அடிப்படையில் பிரிக்கப்படும். | | |
| ஆ) தொடக்க மூலதனத்திற்கு 12% வட்டியும், மிகுதி இலாபம் அல்லது நட்டத்தில் இக்பால் 60%, பண்டா 40% | | |
| இ) தொடக்க மூலதனத்திற்கு வட்டி 12%, இக்பால் சம்பளம் ரூபா 24000, பண்டா சம்பளம் ரூபா 18000 மிகுதி இலாபநட்டம் சமன் | | |
| நிலைமை 2 : தேறியநட்டம் ரூபா 24000 | | |
| பங்குடமை ஒப்பந்தத்தில் உள்ள தகவல்கள்: | | |
| அ) இலாபநட்டம் பங்கிடல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை | | |
| ஆ) இக்பால் சம்பளம் ரூபா 42000, பண்டா சம்பளம் ரூபா 30000, மிகுதி இலாபம் அல்லது நட்டத்தில் இக்பால் 40%, பண்டா 60% | | |

ஈ) 1. சேரன், சில்வா தனித்தனியே இரும்பு வியாபாரம் செய்து வருவோர். இப்போது இருவரும் பங்குடமை வியாபாரம் செய்யத்தீர்மானித்தனர். அவர்கள் பின்வரும் சொத்துக்களை நிறுவனத்திற்குக் கொண்டுவருகின்றார்.

| | சேரன் | | சில்வா | |
|---|---|---|---|---|
| | புத்தகப் பெறுமதி | நியாய விலை | புத்தகப் பெறுமதி | நியாய விலை |
| காசு | ரூ. 10000 | ரூ. 10000 | ரூ. 16000 | ரூ. 16000 |
| கடன்பட்டோர் | 6000 | 6000 | 6000 | 6000 |
| கையிருப்பு | 44000 | 52000 | 36000 | 34000 |
| காணி | 0 | 0 | 8000 | 42000 |
| கட்டடம் (தேறியது) | 26000 | 90000 | 0 | 0 |
| உபகரணம் (தேறியது) | 10000 | 12000 | 14000 | 20000 |
| பொறுப்புக்கள் | (20000) | (20000) | 0 | 0 |
| கொண்டுவந்த தேறிய சொத்துக்கள் ரூபா | 76000 | 150000 | 80000 | 118000 |

அ) இருவரும் கொண்டு வந்த சொத்துக்கள் புத்தகப் பெறுமதியிலா அல்லது நியாய விலையிலா பதியப்படவேண்டும்.

ஆ) இருவரும் கொண்டுவந்த சொத்துக்கள் பதியப்பட்டபின் (ஆனால் வேறு நடவடிக்கைக்கு முன்) மூலதனக் கணக்குகளில் பதியப்படுவது,

1. சேரன் மூலதனம்? ரூபா..........
2. சில்வா மூலதனம்? ரூபா..........

இ) தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சேரன், சில்வா ஆகியோரின் இலாபநட்ட விகிதத்தைப் பற்றி என்ன முடிவுக்கு வரலாம்.

2. பிரேமா, தாசா பங்குடமையின் மூலதனம் முறையே ரூபா 100000, ரூபா 80000 ஆகும். அத்துடன், இலாபநட்டம் 6:4 எனப்பங்கிடப்படும். இந்த நிலையில் ராயு ரூபா 60000 இற்கு காசும், சொத்தும் கொடுப்பதன்மூலம் இணைகின்றார்.

**வேண்டப்படுவது:** நன்மதிப்புக் கணிப்பீட்டைக் காட்டுவதுடன் பின்வரும் நிலமையில் ராயு கொண்டுவரவேண்டிய நன்மதிப்புத் தொகையைக் கணிப்பீட்டு நாட்குறிப்புப்பதிவைத் தருக.

1. ராயுவிற்கு பங்குடமைலாபத்தில் 1/4 பங்கு, 2. ராயுவிற்கு பங்குடமைலாபத்தில் 1/5 பங்கு.

உ) ரொக்கி, சேந்தன், யமால்ரீன் ஆகியோர், அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் நிறுவனத்திற்குக் கொடுத்த சேந்தனின் கடன்மீது ஒத்துக்கொள்ளப்பட்ட 10% வட்டியைத் தவிர வெளிப்படை அல்லது மறைமுக ஒப்பந்தம் இல்லாது அதுவரை வியாபாரத்தை பங்குடமையில் நடாத்துகின்றனர். முதலாம் வருட வியாபாரத்தின் முடிவில் அவர்களின் கணக்குப் பதிவாளர் யமால்ரீன் கட்டளையில் மாத்திரம், பின்வரும் ஐந்தொகையைத் தயாரித்துள்ளார்.

**2003 மார்ச் 31 ஆம் திகதியன்று ஐந்தொகை**

| | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| கடன்கொடுத்தோர்: | | | காசு மீதி | | 900 00 |
| வியாபாரக் கணக்குகள்: 326000 | | | கடன்பட்டோர்: | | |
| கொள்வனவுகள் பேரேட்டு | | | விற்பனை பேரேட்டின் | | |
| வரவு மீதி | (18 000) | 308 000 | படி | 684000 | |
| வங்கி: | | | அதில் செலவு | | |
| | | | மீதிகள் | (82000) | 602 000 |
| காசுப்புத்தகத்தின் படி | 132 000 | | முடிவுப்பொருட்களின் | | |
| அறிமுகப்படுத்தப்படாத | | | தொக்குக் கிரயத்தில் | | 1 216 000 |
| காசோலைகள் | (28 000) | 104 000 | பொறுத் தொகுதி | | |
| சேந்தனிடமிருந்து கடன் | | | கிரயத்தில் | 960 000 | |
| (2002 நவம்பர் 30 ஆம் | | | வருடத்திற்கு | | |
| 10%தில்திகதி கொடுத்தது) | 180 000 | | தேய்மானம் | (96 000) | 864000 |
| வருடத்திற்கு 10 ழு வட்டி | 6 000 | 186 000 | குத்தகையாதனம் | | |
| யமால்ரீன் : | | | 2002 ஏப்ரல் 1 | | |
| | | | ஆம் திகதியன்று | | |
| நன்மதிப்புப் பங்காகக் | | | கிரயத்தில் | | 480 000 |
| காசு | | 100 000 | | | |
| நடப்புக் கணக்குகள் : | | | | | |
| ரொக்கி | 20 000 | | | | |
| சேந்தன் | 18 000 | | | | |
| யமால்ரீன் | 116 000 | 154 000 | | | |
| மூலதனக்கணக்குகள் : | | | | | |
| ரொக்கி | 1 000 000 | | | | |
| சேந்தன் | 800 000 | | | | |
| யமால்ரீன் | 600 000 | 2400 000 | | | |
| | | 3252 000 | | | 3 252 000 |

பங்குடமையாளர்களின் நடப்புக்கணக்கு மீதிகள் பின்வருமாறு ஆக்கப்பட்டன.

| | ரெக்கி (ரூபா) | சேந்தன் (ரூபா) | யமால்ரீவ் (ரூபா) |
|---|---|---|---|
| இலாபத்தின் பங்கு | 250 000 | 200 000 | 150 000 |
| வருடத்துக்கு 6 வீதத்தில் மூலதனம் மீது வட்டி | 60 000 | 48 000 | 18 000 |
| | - | - | 68 000 |
| சம்பளம் | 310 000 | 248 000 | 236 000 |
| | (290 000) | (230 000) | (120 000) |
| எடுப்பனவுகள் | 20 000 | 18 000 | 116 000 |

## இடம்பெயர்ந்தோரின் விபரம் சேகரிப்பு

தெல்லிப்பளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தினால் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் விபரங்களை இந்த பிரதேச செயலகம் சேகரித்து வருகிறது. உயர் பாதுகாப்பு வலயத்தினால் தமது சொந்த வீடுகளை இழநது, வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் மக்களின் விபரங்களை - தெல்லிப்பளை பிரதேச செயலர்பிரிவின் உத்தியோகத்தர்களினால் திரட்டப்பட்டுவருகின்றது. (44)

## நன்றி பாராட்டும் விருந்துபசார விழா

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட இநத வருட கலாசார விழாவில் பங்கெடுத்தவர்களுக்கான நன்றி பாராட்டும் விருந்துபசார நிகழ்வு - நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வலி.வடக்கு பிரதேசசெயலர் க. குணராசா உட்படப் பலர் கலந்துகொள்வர். அன்றைய தினம் கலாசார விழாவின் கணக்கறிக்கையும், நன்றியறிக்கையும் வெளிப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (94)

## சாவகச்சேரியில் தேர்தல் பிரசாரம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரான ந.ரவிராஜ் - நேற்று முன்தினம் தனது தேர்தல் பிரசாரத்தைச் சாவகச்சேரியில் ஆரம்பித்தார்.

தேர்தலுக்கான நியமனப்பத்திரத்தை யாழ்.செயலகத்தில் தாக்கல் செய்துவிட்டு, சாவகச்சேரிக்கு வந்து நவீனசந்தை முன்பாக தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார். சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத் தலைவர் டொக்டர் எஸ்.எஸ். அருளாணந்தம் தலைமையில் நடைபெற்ற ஆரம்பப் பிரசாரக் கூட்டத்தில் வர்த்தகர்களும், பொது மக்களும் கலந்துகொண்டனர். (34,29)

## மூன்று சிறுவர்கள் பெற்றோரிடம் கையளிப்பு

வீட்டைவிட்டு வெளியேறி கொழும்பில் வர்த்தகநிலையமொன்றில் வேலைசெய்த மூன்று சிறுவர்கள் - விடுதலைப் புலிகளின் தலையீட்டால் மீண்டும் பெற்றோருடன் இணைந்தனர்.

உரும்பிராய் தெற்கு அன்னநகையைச் சேர்ந்த மாணவர்களாகிய தே.பிரதீபன் (வயது 15), சி.வினோதன் (வயது 14), யோ.யோன்சன் (வயது 14) ஆகியோரே மீண்டும் பெற்றோருடன் இணைந்தவர்களாவர்.

வர்த்தகநிலையத்தில் வேலை செய்துகொண்டிருந்த சமயம், உறவினர் ஒருவரால் இந்த மூன்று சிறுவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் - போர்நிறுத்தக் கணகாணிப்பு மற்றும் யுனிசெவ் அதிகாரிகள் முன்னிலையில் நேற்றுமுனதினம் பெற்றோரிடம் கையளிததனர். (தீள

# நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பாகவே சர்வதேசம் எதிர்பார்த்திருக்கிறது

### சண்டிலிப்பாய் அரசியற்துறைப்பொறுப்பாளர் பவநிதன்

(சுதுமலை)

தமிழ் மக்களுக்கான தீர்வை - அரசியல்ரீதியாக வென்றெடுப்பதற்காகவே, அமைதிச்சூழலை தொடர்ந்து பேணிவருகின்றோம். அந்த வகையில் தற்பொழுது ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் காற்று வீசத் தொடங்கியுள்ளது. பலரும் பல எதிர்பார்ப்புக்களுடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள் எனச் சண்டிலிப்பாய் பிரதேச அரசியறதுறைப் பொறுப்பாளர் சு.பா.பவநிதன் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்றில் நடைபெற்ற சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறி, கூட்டணி எம்.பிக்கள் நாடாளுமன்றம் சென்றனர். இந்த முறை தேர்தலுக்குப் பகிரங்கமாகவே ஆதரவு வழங்குகின்றோம். இதற்கான காரணம் உங்களுக்குத் தெரியும். நாங்கள் தேர்தல்மூலம் நாடாளுமன்றம் சென்று அங்கே எதனையும் சாதிக்கப் போவதில்லை.

ஆனால், இந்தத் தேர்தலை தேர்தலாக எண்ணாது, தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பாகவே சர்வதேசம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளுக்கு எப்படியான ஆதரவு இங்கே இருக்கின்றது. இந்த மக்களுடைய நிலை என்ன. இந்த மக்கள் எதற்காக இந்த போராட்டத்தை இவ்வளவு காலமும் ஆதரித்தார்கள் என்பதை அறிவதற்காகவே சர்வதேசம் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருகிறது. இதில், நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் எமது மக்களினுடைய வாழ்வு கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனால், எங்களுடைய ஒட்டுமொத்தமான ஐக்கியமும், தேசப்பற்றும்தான் எங்களை இந்த மண்ணிலே ஒரு புதிய சமூகமாக - விடுதலை பெற்ற சமூகமாக மாற்றமுடியும்.

எனவே, வரப்போகும் தேர்தலை சரியாக எதிர்கொண்டு, பங்களிப்பு வழங்கவேண்டும். இன்றைய அசாதாரண சூழ்நிலையைச் சரிவரப் புரிந்துகொண்டு ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் வாழ்வை, சுதந்திரத்தை, ஐக்கியத்தை சர்வதேசம் புரிந்துகொள்ளும் ஒரு சூழநிலையை ஏற்படுத்தவேண்டும். இவற்றைச் சரியான முறையில் புரிந்துகொண்டு, சரியான முறையில் செயற்படவேண்டும்.

எமது மக்கள் அனைவரும் ஒரேகுடையின்கீழ் அணிதிரண்டு, ஒரேசமூகமாக, சுதந்திரமாக வாழ சரியான சக்திகளை இனம் காணவேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (91,44)

# மக்கள் விரும்புகின்ற தீர்வில் சமாதானம் தொடரவேண்டும்

### முன்னாள் எம்.பி.சிவாஜிலிங்கம்

சிங்கள தேசத்தில் இன்று இனவாதம் மேலோங்கியிருக்கிறது. இனவாதத்தைக் கக்கும் ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஒரு கூட்டமைப்பை அமைத்துள்ளது. இது பலமான கூட்டணியாகவிருந்து, சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கையை முறியடிப்பதற்காகும் என தேசிய கூட்டமைப்பின் சார்பில சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துதெரிவிக்கையில் - எந்தச் சவாலையும் சந்திக்க தமிழ்த் தேசிய இனம் தயாராக இருக்கவேண்டும். யுத்தமா, சமாதானமா என்ற கேள்விக்குச் சிங்கள தேசம் பதிலளிக்கவேண்டும். தமிழ் மக்கள் விரும்புகின்ற தீர்வில் சமாதானம் தொடரவேண்டும் என நினைப்பவர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கரங்களை ஓங்கச் செயய வேண்டும் என அவர் தெரிவித்தார். (தீ)

# வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் வீடு இடித்து அழிக்கப்பட்டது

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வெடிபொருளகற்றும் பிரிவினரால் தனது வீடு இடித்து அழிக்கப்பட்டதாகத் தெரிவித்து, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். இராசேந்திரம் என்பவரே இந்த முறைப்பாட்டைத் தெரிவித்தார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது- ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்ட எனது காணியில் நான் சிலகாலம் வசித்துவந்தேன். எனினும் சில திருத்தவேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு, எனது குடும்பத்துடன் வேறு வீடொன்றில் தங்கியிருந்தேன். அந்தச் சமயம் எனது காணிக்குள் வெடிபொருட்கள் இருக்க வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்து, ஹலோ ட்ரஸ்ட் வெடிபொருள் அகற்றும் பிரிவினர் - எனது வீட்டை அடி அத்திவாரம்கூட இல்லாத வகையில் அள்ளிச்சென்று, வெடிபொருள்கள் வெடிக்கவைக்கப்படும் இடத்தில் போடப்பட்டுள்ளது.

தற்போது எனது வீடு இருந்த இடம்கூட எது என்று தெரியாதுள்ளது. அந்த வீட்டைத் திரும்பவும் கட்டுவதானால் எனக்குப் பல லட்சம் ரூபா செலவு உண்டாகும். அதனை யார் தருவார்கள்.

வெடிபொருள் அகற்றும் பிரிவினரின் இந்த அடாவடித்தனமான செயலுக்குச் சரியான நீதியொன்றைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## மஹோற்சவம்

(வடமராட்சி)

தம்பசிட்டி - பண்டாரியம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம்- நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மார்ச் மாதம் 5 ஆம் திகதி தேர் உற்சவமும், 6 ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும் நடைபெறவுள்ளது. (17)

## பொலிஸாரால் கசிப்பு பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

மடத்தடி வீதிப்பகுதியில் 200 லீற்றர் கசிப்பு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, இந்த கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. நான்கு கலன்களிலிருந்த கசிப்பை - பொலிஸார் கைப்பற்றி, பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர்.

இந்த சம்பவத்தில், ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகின்றது. (தீ)

## பொலிஸ் பாதுகாப்புடன் தேர்தல் நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலை முன்னிட்டு பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ள ஈ.பி.டி.பியினர் - தமது கட்சிக் கொடிகளைப் பிரதான வீதிகள் பலவற்றிலும் பறக்கவிட்டுள்ளனர்.

சிவபபு, மஞ்சள், பச்சை ஆகிய வர்ணங்கள் அடங்கிய இந்தக் கொடிகளைத் தமது பிராந்திய முகாம்களின் முன்பாகவும், மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள வீதிகளிலும் பறக்க விட்டுள்ளனர்.

இந்தக் கொடிகளை கட்டும்போது, ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு ஆயுதம் தரித்த பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (94)

## மோட்டார் சைக்கிளுடன் மோதிய மாணவி படுகாயம்

இல்லமெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட பெண்களுக்கான சைக்கிள ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட மாணவி - மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு படுகாயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு, நடாத்தப்பட்ட பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குபற்றிய மாணவியான எஸ்.அனுஷா (வயது 17), போட்டியின் முடிவிடத்தை அண்மித்துக் கொண்டிருந்தவேளையில், எதிர்பாராதவிதமாக முன்னால் வந்தமோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் படுகாயமடைந்தார் (101)



வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சி.சோதிமயம் மங்கள விளக்கேற்று வதையும், அருகில் பாடசாலை அதிபர் த.தவேந்திரராஜாவையும் படத்தில் காணலாம்.

# சண்டிலிப்பாய் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த ஏற்பாடு

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த பிரதேச செயலகததினால் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சிகளை முடித்த மாணவிகளினால் உற்பததி செய்யப்படும் கைத்தொழில் பொருட்களையே விற்பனை செய்வதற்கு, சரியான ஓர் காட்சியறையினை அமைக்க குறிப்பிட்ட செயலக பிரதேசசெயலரினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

இந்த மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட மனையியல் கண்காட்சியில் கலந்துகொண்ட பிரதேசசெயலர், குறிப்பிட்ட பொருட்களை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, அதனைத் திறமையாக உற்பத்தி செய்த மாணவிகளையும், பயிற்றுவித்த ஆசிரியையும் பராட்டியதுடன், இந்த குறுகியகால கண்காட்சி போதாது எனவும், இதனை நிரந்தரமான ஓர் இடத்தில் வைத்து விற்பனை செய்யவேண்டும். அதற்கு மிக விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையிலேயே விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (44)

# கரமத்தை கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம்

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் - இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. மார்ச் மாதம் 4 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 5 ஆம் திகதி இரதோற்சவம், தீர்த்தற்சவம் என்பனவும், இறுதிநாள் 6 ஆம் திகதி பூங்காவனம், திருக்கல்யாண உற்சவம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

தினமும் காலை 9.30 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை கிரியைகள் இடம்பெறும் எனவும், திருவிழா உபயகாரர்கள் ஆலய வளாகத்தில் விடியோ திரைப்படம் எதுவும் காண்பிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், சகல திருவிழா உபயகாரர்களும் குறித்த நேரத்திற்கு வந்து ஒத்துழைப்பு நல்குமாறும் ஆலயபரிபாலனசபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (113)

## நீங்களும் பேச்சாளராகலாம்... - தில்லைநடராசா



# செந்தமிழும் நாப்பழக்கம்

*சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்'* - என்பது பழமொழி

சாதாரணமாக நாவன்மையைக் காட்டி மற்றையோர் கவனத்தையும் கருத்தையும் கவரவேண்டிய சந்தர்ப்பங்களைப் பற்றித் திருக்கக்கூடும். அப்போதெல்லாம் பேச்சுக் கலையை நன்கு பயிலவேண்டுமென்ற எண்ணம் எழுந்திருக்கலாம். எப்படி நாவைப் பழக்கப்படுத்தி நன்மைபெறலாம் என்பதைச் சிறிது பார்ப்போம்.

பள்ளி வாழ்க்கைக்குப் பின் தேடிக்கொள்ளும் தொழிலால் - அங்கத்தவராக உள்ளீர்த்துக்கொள்ளும் அமைப்புக்கள் தரும் பொறுப்புக்களால் - பெரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தாவிட்டாலும் - வரவேற்புரை, நன்றியுரை, தலைமையுரை ஆகியவற்றை ஆற்ற வேண்டி ஏற்படலாம். அவற்றை ஆயத்தம் செய்யாவிட்டால் பேச்சில் சோர்வுதட்டி, ஏற்பாட்டாளரிடம் குறைகேட்க நேரிடலாம். சில வேளைகளில் கேலிப் பேச்சுக்களுக்கும் ஆளாகலாம். எனவே, பேசுவதற்கு முன்பாகப் பேசப்போகும் விடயம் குறித்து சிறிதேனும் ஆயத்தம் செய்வது அவசியம்.

என்ன விடயத்தைப் பற்றிப் பேசவேண்டும்- எவ்வளவு நேரம் பேசுவதற்கு எடுத்துக்கொள்ளலாம் - எப்படிப்பட்ட சபையோர் முன்னிலையில் உரையாற்றவேண்டும் - உரைக்கு முன்பாக இடம்பெறக்கூடிய நிகழ்ச்சிகள் - உரையைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் முடிந்தவரைக்கும் முன்கூட்டியே அறிந்துகொண்டால், சுவையான பேச்சைத் தயாரிப்பது சுலபமாக இருக்கும்.

பேசப்போகும் தலைப்பைச் சரியாகவும் தெளிவாகவும் விளங்கிக்கொண்டபின், விடயம் தொடர்பான நூல்களை நுணுகி ஆராய்ந்து நுட்பமான தகவல்களைக் குறிப்புக்களாக எடுத்துக்கொள்ளவேண்டும். புத்திஜீவிகள் முன்னிலையில் நிகழ்த்தும் உரையானால் - சரியான புள்ளிவிவரங்களையும் தேவையான தரவுகளையும் சேர்ப்பது அவசியம். அழுத்தம் கொடுக்க நினைக்கும் விடயங்களுக்கு - அறிஞர்களினதும் மேதாவிகளினதும் மேற்கோள்களைச் சுட்டிக்காட்டுதல் நன்று. சபையைத் தம்பால் திருப்ப எண்ணும்போது - விடயத்திலிருந்து விலகிச்செல்லாது, நகைச்சுவையைச் சேர்ப்பதும், உபகதைகளைச் சொல்வதும், இசையோடு பாடல்கள் சிலவற்றை இசைப்பதும் பேச்சுக்கு அலங்காரமாக அமையும்.

பேச்சாளராக வரவிரும்புவோர் முடிந்தளவுக்கு மற்றவர்கள் பேசுவதைக் கேட்கவேண்டும். எழுத்துருவம் பெற்றபேச்சுக்களை வாசிகக வேண்டும். கேட்பதாலும், படிப்பதாலும் பேச்சுக்கள் அமைந்திருக்கும் ஒழுங்கையும் அழகையும் உணரமுடியும். பேசும்முறைகள் பலவற்றைக் கேட்டபின்னர், பேசுவோர் தமக்கென ஒரு தனிப்பாணியை அமைத்துக் கொள்வது நல்லது. நல்ல கருத்துக்களை நினைவில் நிறுத்துவதோடு, குரல் வளத்தையும் பயன்படுத்திப் பழக்கப்படுத்திக் கொண்டால் சிறப்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தக்கூடியதாகவிருக்கும்.

எவ்வளவுதான் சொல்லில் வல்லவராக இருந்தாலும், ஆயத்தம் செய்யாவிடின் புதிய தலைப்புக்கள், புதிய மேடைகள் தோல்வியைத் தரக்கூடும். சபையோருக்குச் சலிப்பு ஏற்பட்டால், பேச்சை முடிக்கவேண்டியோ அல்லது சுருக்கவேண்டியோ ஏற்படலாம். எனவே, எப்படி எடுத்து வளர்த்துச் சென்றுமுடிப்பது என்ற ஒழுங்குமுறையைச் சிந்தித்து வைப்பது நல்லது. பாடமாக்கிய பேச்சுக்களும் சோடைபோய்விடுவதால், பேச்சின் முக்கிய அம்சங்களைக் குறித்து வைத்துக்கொண்டு சபையையும் நேரத்தையும் கவனித்து, எடுத்த குறிப்புக்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசுவது நல்லது. யாதொரு குறிப்பும் இல்லாவிட்டால் முன்னுக்குப்பின் முரணாகச் சொல்ல வேண்டியோ அல்லது ஒழுங்குமுறையின்றி எழுந்தமானக் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியோ ஏற்படலாம். இன்னும் சிலவேளைகளில் பொய்த் தகவல்களையும் பொருத்தமில்லாதவற்றையும் சொல்லிவிடக்கூடும். ஆகவே, ஒரு முழுமையான பேச்சைத் தயார் செய்வது எப்போதும் நல்லது. அனுபவ முதிர்ச்சி ஏற்படும்போது ஆயத்தம் எதுவுமின்றி பேச்சுக்களை நிகழ்த்துதல் கைகூடும். இருப்பினும் விடயத்தையொட்டியதாகக் குறிப்புக்களை வரிசைக்கிரமத்தில் எழுதி வைத்திருப்பின், சந்தர்ப்பத்தைப் பொறுத்து பேச்சை நீட்டி நிகழ்த்தவோ அல்லது சுருக்கி முடக்கவோ முடியும்.

அநேகமாக இப்போதெல்லாம் சிறிய சபைக்கும் ஒலிவாங்கி இண்ணப்பு இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஒலிவாங்கியின் தன்மையை அளவிட்டு, தூரத்தைக் கணக்கிட்டு நிற்பதும், ஒலிவாங்கிக்கேற்ற வகையில் உதடுகளை அசைப்பதும், ஏற்ற இறக்கம் காட்டுவதும் பேச்சைச் சிறப்பிக்கும். எழுதிய பேச்சை வாசிக்கும் சந்தர்ப்பங்களில் உதடுகளுக்கும் ஒலிவாங்கிக்கும் இடையில் கடதாசிகள் அகப்பட்டு பேச்சின் தரத்தைக் குறைத்து விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். மேடையில் நின்று உரையாற்றும்போது - சபையை மறந்து மேடையிலிருப்போரை மட்டும் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பேசுவது அழகல்ல. ஒலிவாங்கி ஒத்துழைக்காவிட்டால் சபையோரின் சங்கடங்களையும் சந்திக்கவேண்டியேற்படலாம்.

**இந்தத் தேர்தல்காலம் மக்களிடையே தமது கருத்துக்களை அரசியல்வாதிகள் தமது பேச்சாற்றல் மூலம் வெளிப்படுத்தத் தொடங்கி விடுவார்கள். அரசியல்வாதிகள் தமது நாக்கை எவ்வாறு பழக்கப்படுத்த வேண்டும் என்று கூறுகின்ற கட்டுரை இந்த நேரத்தில் பிரசுரமாவது தேவை எனக் கருதுவதால் இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

நாடக பாணியிலோ அல்லது நடனமாடிக் கொண்டோ பேசுவதைக் கேட்க அநேகர் விரும்பமாட்டார்கள். இயல்போடிணையாமல் கைகளை அசைத்துப் பேசுவதும் - சபையிலிருக்கும் சிலரைச் சவாலுக்கு அழைக்கும் வகையில் கைகாட்டிப் பேசுவதும் - அழகில்லா வகையில் கண்களை உருட்டிப் பேசுவதும் - அங்கங்களை அசைப்பதும் - பேச்சை அலங்கரிப்பதற்குப் பதிலாக அலங்கோலத்தை ஏற்படுத்தும். சொல்லலங்காரம் செய்வதாக எண்ணிக் கருத்துக்களற்ற அடுக்கு வசனங்களை அமைத்துப் பேச்சுக்களைத் தயார் செய்வதும் நல்லதல்ல.

நீண்ட பேச்சானால் நாவறண்டு தாகம் ஏற்படலாம். அதற்காக அடிக்கடி பானமருந்திப் பேசுவதும் பார்ப்பவருக்கு வெறுப்பைத் தோற்றுவிக்கலாம். பேச்சை ஆரம்பிக்க முன்னரும் பேச்சை முடித்த பின்னரும் தாகசாந்தி செய்வது நல்லது. பேச்சினிடையே அடிக்கடி 'அ....' இழுத்துச் சொல்லுதல், செருமுதல், 'மன்னிக்கவேண்டும்' கோரிக்கை விடுதல் என்பன நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தாது. பேச்சு நிகழ்ச்சிகளின் போது, பரிமாறப்படும் சிற்றுண்டி வாயினுள்ளே இருப்பின், பேச்சின் இயல்பை அவலட்சணமாக்கிவிடும் என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

பேச்சை நிகழ்த்துபவரின் முகத்தோற்றமும் தெளிவாக இருக்கவேண்டும். விகாரமாக வைத்துக்கொள்ளல், செயற்கைச் சிரிப்பை ஏற்படுத்துதல், சபையைப் பார்க்காமல் எழுதிய பேச்சை வாசித்தல் ஆகியவற்றைப் பெரும்பாலானவர்கள் இரசிக்கமாட்டார்கள். சிறந்தமுறையில் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் நல்ல கருத்துக்களைக் கேட்போருக்கு உட்செலுத்த முடியாமற்போய்விடும்.

பேசும்போது தோற்றமும் அசைவுகளும் எப்படியிருக்கும் என்பதை நிலைக்கண்ணாடி முன்நின்று பேசிப்பழகுவதால் உணரக்கூடியதாகவிருக்கும். 'ஆள்பாதி, ஆடைபாதி' என்பதையும் மனதிற்கொள்ளவேண்டும். நேர்த்தியான ஆடைகள் - பேச்சை நிகழ்த்துவோருக்கு அழகையும் மதிப்பையும் தரவல்லன. கண்ணாடி முன் பேச்சை ஒத்திகை பார்ப்பதால், நம்மை நாமே திருத்திக்கொள்ளவும் முடியும்.

வசதியிருப்பின் பேச்சை விடியோ ஒளிப் பதிவு அல்லது ஓடியோ ஒலிப்பதிவு செய்து திருப்பிப் பார்த்தும், கேட்டும் ஏற்ற மாற்றங்களைச் செய்வதும் நல்லது.

கூச்சமெதுவுமின்றிப் பேசிப் பழகவும் விடயஞானத்தைப் பெருக்கிக்கொள்ளவும், கல்லூரிகளில் இயங்கும் இலக்கியக் கழகங்கள்- மாணவர் தேர்ச்சிச் சங்கங்கள் போன்ற அமைப்புக்களை பயன்படுத்தினால் நாப்பழக்கம் நன்றாய் அமையும்.


*'நல்லவன் நாவசைத்தால் நாடசையும்'*

## அறிவியல் - தொகுப்பு : ஜெயா

### இது நிஜமா? கனவா? கற்பனையா?

நமது பாவனையிலுள்ள கொண்டுசெல்லக்கூடிய கையடக்க சாதனங்கள் அனைத்தும் சாதாரணமாக ஒரு தட்டையான மேற்பரப்பில் வைக்கப்படும்போது அவை மின்னேற்றப்பட்டு, தங்களுக்குத் தேவையான சக்தியைப் பெற்றுக்கொள்கின்றன. ஒரு உலகினைக் கற்பனை செய்து பார்த்த காலம் போய், இன்று அவை நிஜமாக மாறிக்கொண்டிருக்கின்றன என்றால் அதுமிகைப்படாது.

சிப் (Chip) உற்பத்தியாளர்களான மொபைல வைஸ் (Mobile wise) இதற்கு மேலாக இந்த கற்பனை உலகிற்கு அப்பாலும் நுழைந்து



விட்டார்கள். 2002 மார்கழி முற்பகுதியில் அவர்கள் வெளியிட்டிருக்கும் **Cunductive solution** மூலம் இது சாத்தியமாகக் கூடிய வகையில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

நியூயோர்க் (**Newyork**) நகரத்தில் கூட்டப்பட்ட இதழியலாளர்கள் மாநாட்டில் மொபைல் வைஸ் நிறுவனம், அந்த நிறுவனத்தினுடைய புதிய சிப்செற் ஐப் பயன்படுத்தி, மொபைல் சாதனங்கள் சிலவற்றிற்கு அவர்களது மற்றைய சிப் ஐக் கொண்டு தயாரிக்கப்பட்ட சக்தி வழங்கியிலிருந்து கம்பி இல்லாமல் மின்சாரத்தை வழங்கி, மின்னேற்றிப் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள்.

அவர்கள் உபயோகித்த சிப்களில் ஒன்றான ரி.ஏ.சி. (**Tiny Adapter Controller**) ஆனது குறிப்பிட்ட மொபைல் சாதனத்தின் உள்ளே பொருத்தப்பட்டிருக்கும். மற்றைய சிப் ஆன சி.சி. (**Contact Controller**) கொண்டு சக்தி வழங்கிச் சாதனம் அமையப் பெற்றிருக்கும். இந்தச் சாதனங்கள் பல்வேறு வகையான வடிவங்கள், அளவுகள், வர்ணங்களில் உள்ளன.

மேலும் ஒவ்வொரு சக்தி வழங்கிகளும் தங்கநிற மேற்பரப்பில் சுற்றப்பட்டிருக்கும். இந்தநிறுவனத்தின் பேசவல்ல அதிகாரியான **Andygoren** கூற்றுக்கு இணங்க, இந்தச் சக்தி வழங்கிச் சாதனத்தின் மேற்பரப்பு மாற்றப்படக்கூடியது. இந்த செயற்பாடுகளுக்குரிய அடிப்படைத் தொழில்நுட்பம் மிகவும் இலகுவானது.


மொபைல் சாதனத்தை சக்தி வழங்கிச் சாதனத்தின்மீது வைத்ததும், மொபைல் சாதனத்திலுள்ள அடப்ரர் சிப் ஆனது சக்தி வழங்கிலிருந்து சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்ளும். அதன் பின்பு மின்சக்தியைத் தேவையான அளவுக்குப் பெற்றுக்கொள்ளும்.

இதேவேளை, சக்தி வழங்கியானது மிகையான காந்த உணர்திறன் வாய்ந்ததாக இருக்கும். இது அடப்ரர் சிப் உள்ளடக்கப்பட்ட குறித்த மொபைல் சாதனம் வைக்கப்பட்டாலன்றி, எப்பொழுதும் மின்சக்தியை வழங்கிக் கொண்டிராது. உதாரணமாக உங்கள் கைகளை அதன்மீது வைத்தாலும் ஏதும் நிகழாது.

இவர்களுடைய தயாரிப்பு முற்றுமுழுதாகப பாதுகாப்பானது எனவும், மனிதனுக்கு இதில் இருந்துவரும் மின்சாரத்தால் எவ்விதபாதிப்பும் இல்லையெனவும், நீர்ப் பாதுகாப்பையும் (**water Proof**) உடையது எனத் தெரிவித்தார் பேசவல்ல அதிகாரியான **Andy goren**.

மேலும், அவரது கருத்துப்படி இந்த சிப்களை ஏனைய சாதாரண உபகரணங்களையும் மின்னேற்றப் பாவிப்பதற்கு ஆலோசித்து வருவதாகவும் கூறினார். இது சாத்தியமாகுமாயின் எல்லா சாதனங்களையும் சக்திவழங்கி போன்ற ஒரு சாதனத்தில் வைத்தே மின்னேற்றி விடலாமல்லவா? அப்படியானால் மின்சாரம் பெறுவதற்கு இனி கம்பியும் வேண்டாம், தூணும் வேண்டாம் அல்லவா, ஆனால் திருட்டு மின்சாரம் பெறுபவர்கள் கதி என்ன ஆவது? இதற்கான சிந்தனையை இவர்களிடமே விட்டுவிடுவோமே.

இந்த ஆண்டு இறுதிப் பகுதியில் தரவையும் (**Data**) இவ்வாறு கம்பி இல்லாது **Transfer** செய்வதற்கான முயற்சியில் **Mobile wise** இறங்கி இருக்கின்றது. தகவல் தொழில்நுட்ப



(IT) உலகம் போகிறபோக்கைப் பாருங்களேன்.

### ஈ - தொலைநகல் (மடல்) (E -/Fax)

இலத்திரன் தொலைநகல் (**E - Fax**) என்றால் - இலத்திரன் அஞ்சல் (**E - Mail**) வைத்திருக்கும் ஒருவர், இலத்திரன் அஞ்சல் (**E - Mail**) வசதியில்லாத ஒருவருடன் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். இங்கு முக்கியமாகத் தொலைநகல் இயந்திரம் (**Fax Mechine**) பெறுநபரிடம் இருக்கவேண்டும்.

இதன்மூலம் உள்ளூர்க் கட்டணத்துடன் நாம் தொலை மடல்களை அனுப்பிக்கொள்ளலாம்.

இலத்திரன் அஞ்சலில் இருந்துகொண்டே நாம் தொலை மடல்களை உலகின் பெரும் பகுதிகளுக்கு அனுப்பக்கூடியதாக இந்த வசதி காணப்படுகின்றது. இதற்கு நாம் முதலில் இணையத்தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நீங்கள் ஒன்லைன் (**Online**) உள்ளபோது **http/www.tpc.int** என்ற தளத்துக்குச் செல்லவும்.

இந்தத் தளத்திலே நீங்கள் எந்த நாட்டுக்குத் தொலைநகல்களை அனுப்பலாம் என்ற நாடுகளின் பட்டியலில் காணப்படும் அமெரிக்க, கனடா, ஐக்கிய ராஜ்ஜியம், சுவீடன், ஜேர்மனி, சிங்கப்பூர், ஹொங்ஹொங் போன்ற நாடுகளுடன் முழுமையாக இந்த முறையில் செய்திப் பரிமாற்றம் செய்யக்கூடியதாக இருக்கும்.


இந்தியாவில் சென்னைக்கு மாத்திரம் தொடர்புபெறக்கூடியதாகவுள்ளது. இங்கே நீங்கள் பக்ஸ் இலக்கத்தினைக் கொடுத்தவுடன் அது **E- Fax** செய்யமுடியுமா? என உங்களுக்குத் தெரிவிக்கும்.

(**E - Fax**) அனுப்புவதற்குப் பின்பற்ற வேண்டிய முழுவிபரத்தினையும் இந்தத் தளத்தின் முன்பக்கத்தில் (**Home Page**) இல் பார்க்கமுடியும்.

*இலத்திரன் தொலைநகல் - மின்தொலைநகல்*
*இலத்திரன் அஞ்சல் - மின் அஞ்சல்*

### விழிவெண்படலம் வருடி குற்றவாளிகளைக் கண்டறியும் நவீன கணினிகள்

நாட்டில் நடக்கும் பல்வேறு குற்றச் செயல்களைக் கண்டுபிடிப்பதற்குப் பல்வேறு முறைகள் காணப்பட்டபோதும், வங்கி போன்ற பல்வேறு கொள்ளைகளின்போது தொழில்நுட்ப குறைபாடுகளைப் பயன்படுத்தி குற்றம் புரி



பவர் தப்பித்துக்கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

மற்றும் இரட்டையர்கள் தொடர்பான ஆள் மாறாட்டங்களையும் கட்டுப்படுத்தும் நோக்கோடு அறிமுகப்படுத்தப்பட்டதே, விழிவெண் படலத்தை வருடிக்காட்டக்கூடிய கணினிகளாகும்.

ரிச்சாட், மைக்கல் என்ற இரட்டைச் சகோதர்கள் இருவரும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகவே இருந்தனர். இதனால் வங்கிகள், மருத்துவமனைகள் என்பன இவர்களுடனான தொடர்பின்போது பெரும் இடர்படவேண்டியிருந்தது. இதனால் அமெரிக்காவில் கூஸ்டன் நகரில் விழிப்படலத்தை வருடிக்காட்டக்கூடிய கணினி (**Computer**) இயந்திரத்தின் முன் இவர்களை அமரவைத்து, பெரிதாக்கி திரையில் காட்டப்படும் விழிப்படலத்தைப் பார்த்தவுடனேயே யார் ரிச்சாட், யார் மைக்கேல் என அடையாளம் கண்டுகொண்டனர்.

இந்தப்புதிய முறையினை- வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டுகொள்ளவும், வர்த்தகரீதியில் பயன்படுத்தவும் ஆரம்பித்துவிட்டன. வங்கிகளில் அமைக்கப்பட்டிருக்கும் கமராக்களின் வழியாக வாடிக்கையாளர்களை வரவழைத்து, ஏற்கனவே எடுக்கபட்ட படங்களுடன் ஒப்பிட்டு, வந்திருப்பவர் அதே வாடிக்கையாளர்தானா என்று கண்டுபிடிப்பார்கள்.

ஆனால், விழிப்படலத்தைக் கொண்டு ஆராய்வது இன்னும் துல்லியமானதாகும். ஏன் தெரியுமா? இன்றைய மருத்துவ வசதியைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் சிகிச்சை முறை செய்யப்படும் ஆள்மாறாட்டமும் தவிர்க்கப்படலாம்.

*நன்றி :*

**Tamil Computer (1999)**
**Weptamilan.com and Computer Today (2003)**
**Computer express (2002)**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்*
*தஞ்சம் எளியன் பகைக்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தலும் வன்முறை சக்திகளும்

தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்கள் யாவும் நேற்று மதியத்துடன் ஒருவாறு முடிவடைந்துவிட்டன.

வேட்பாளர்கள் - வாக்காளர்களைச் சந்தித்து வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, வாக்குகளை யாசிப்பதற்கான களம் மீண்டும் ஒருமுறை திறந்து விடப்பட்டுள்ளது.

பிரசாரப் பீரங்கிகளின் அனல்பறக்கும் பிரசார வார்த்தைக் குண்டுகள் - வாக்காளரைச் சுற்றி வளைத்து முற்றுகையிடுவதற்கான நாட்கள் நெருங்கிவிட்டன.

இனவாதம், மதவாதம், வகுப்புவாதம், சந்தர்ப்பவாதம் என்ற அனைத்தும், ஜனநாயக கோட்பாடுகளையும், தத்துவங்களையும் முற்றுகையிட்டுள்ளநிலையில், பண நாயகவாதிகளின் ஆட்சியதிகாரம் மேலோங்கியிருப்பதானது - இலங்கையின் தேர்தல் கால யதார்த்தமாகவே இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு இந்த தேர்தலும் விதிவிலக்காக இருக்கப் போவதில்லை என்பதை வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வுகள் யாவும் உறுதிசெய்தேயுள்ளன.

தேர்தல் வன்முறைகளின் புள்ளிவிபரங்கள் இப்போதே அதன் ஆபத்தின் அதிகரிப்பைக் காட்டுவனவாகவுள்ளன. கடந்த தேர்தலின்போதான வன்முறைகளில் ஜனாதிபதி, பாதுகாப்புப் பிரிவினர், படைத் தரப்பினர் உட்படப் பலரும் ஈடுபட்டிருந்ததுடன், முன்னைய அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் ஈடுபட்டு, இலங்கையின் ஜனநாயகம் எந்தவகையில் பேணப்படுகின்றது என்பதைப் பகிரங்கப்படுத்திக் கொண்டனர்.

தேர்தல் நெருங்க நெருங்க - தேர்தல்கால வன்முறைகள் தென்பகுதியில் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இப்போதே தென்பட ஆரம்பித்துள்ளன. இன்னமும் ஆரம்பமாகவில்லை என்றாலும், கடந்த தேர்தலில் இத்தகைய வன்முறைகளின் பின்னணியிலும், முன்னணியிலும் செயற்பட்டோர்களில், பொரும்பாலானோர் - இந்தத் தேர்தலிலும் பிரசன்னமாகியுள்ளதால், அடுத்துவரும் பிரசாரவேகம் கொண்ட நாட்கள் - வன்முறைகள் அரங்கேறும் நிகழ்வுகளைக் கொண்டதாக இருக்கும் என்றே எண்ணத்தோன்றுகிறது. தேர்தல் வன்முறைகள் இலங்கையின் ஜனநாயக மரபாகவே மாறிவிட்டதுதான், சகல பிரச்சினைகளுக்கும் மூலகாரணம்.

கருத்தியல் மோதல்களை அல்லது கொள்கை முரண்பாடுகளை - ஜனநாயக ரீதியிலான வழிமுறைகளால் எதிர்கொள்ளும் திறனோ, பண்போ அற்றவர்களே - வன்முறைகள்மூலம் அதனை எதிர்கொள்ள விழைகின்றனர் என்பதே உண்மையாகும். அத்தகைய தன்மை கொண்ட - தம்மை ஜனநாயக வாதிகள் என்று கூறிக்கொள்ளும் - அரசியல்வாதிகள் தென்னிலங்கையில் மட்டுமல்லாது, வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் கூட நிலைகொண்டிருப்பதுதான் தமிழ் பொது மக்களின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாகவுள்ளதெனலாம். இவர்களுக்கு அரச ஆயுதப்படைகளின் அனுசரணையும் இருப்பதுதான் மேலும் பீதியை ஏற்படுத்தும் விடயமாகும். கடந்த பொதுத் தேர்தலின் போதும் வடக்கு - கிழக்கின் பலபகுதிகளில் தேர்தல் வன்முறைகள் ஏற்பட இவர்களே காரணமாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கு இன்னமும், ஒரு மாத காலமே இருக்கும இந்த நிலையில் தென்பகுதி அரசியலில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்பது இப்போது எதிர்வு கூற இயலாத போதிலும், எந்தவொரு கூட்டணியும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடிக்கும் நிலை உருவாகும் சாத்தியம் குறைவாக இருப்பதாகவே ஆரம்பக் கட்ட கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஆனால், வடக்கு - கிழக்கில் இம்முறை தமிழ்மக்களின் ஒருமைப்பாட்டையும், ஏகோபித்த நிலைப்பாட்டையும், சிதறடிக்கும் நோக்குடன் பல்வேறு அரசியற்கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளமையை குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இவர்களின் பின்னால் இவர்களை இயக்கும் தமிழின விரோத பேரினவாத சக்திகளும், சில வெளிச்சக்திகளும் இவர்களுக்கு பெருமளவில் நிதிவசதிகள் உட்பட பல்வேறு உதவிகளையும், வழங்கி வருவதாக செய்தி ஊடகங்கள் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளன.

இவர்கள் அனைவரதும், ஒரே நோக்கம் - இலட்சியம் - கொள்கை அனைத்துமே தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவானது தமிழர்தேசியக் கூட்டமைப்பிற்குக் கிடைக்கும் பேரெழுச்சி நிலையைச் சிதைப்பதேயாகும்.

இதன்மூலம் தமிழினம் ஏகோபித்த குரலில் தமது அரசியல் தலைமையை, தேர்வு செய்வதையும், தாம் எவரது ஆளுமை மிகு வழிகாட்டலின் பின்னால் அணி திரண்டுள்ளோம் என்பதை சர்வதேச சமூகத்திற்கு உறுதிபடத் தெரிவிப்பதையும் தடுப்பதே மேற்குறித்த தமிழின விரோத சக்திகளினதும் திட்டமாகும்.


இது நிச்சயம் சாத்தியமாகப் போவதே இல்லை. பொங்கு தமிழுணர்வால் பூரித்து நிற்கும், தமிழர்கள் தம்மை கூறுபோட்டு தமது ஒருமைப்பாட்டை தகர்க்க நினைப்போரை இனங்கண்டு ஒதுக்கும் திறன் கொண்டவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் தேர்தலாகவே இந்தத் தேர்தலை அவர்கள் கருதுகின்றனர்.

எனவே கையாலாகாத நிலையில் அவர்கள் முன்னரைப் போல வன்முறைகளையும், கையாள முனையலாம்.

தமிழ் மக்கள் உறுதியான உணர்வுடன் விழிப்பாக இருக்க வேண்டிய காலகட்டத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களாகவுள்ளனர் என்பதே உண்மை.

## நாடும் நடப்பும்

செய்தி:- இன்றைய சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகள் அனைத்தும் ஒன்று திரண்டு தேர்தலில் அணிசேர்ந்திருப்பது போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு ஆபத்தாக உள்ளது என ஆய்வாளர் கருத்து.




### திருமலை கடற்படைத்தளத்தில்

# சேதமுற்ற இறங்குதுறையை கடற்படையினர் மீளத் திறப்பு!

திருகோணமலைத் துறைமுகத்திலுள்ள கடற்படைத் தளத்தில், புலிகளின் தாக்குதலால் சேதமுற்ற இறங்கு துறையொன்று மீளவும் திருத்தப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் திருமலைக் கடற்படைத்தளம் மீது, புலிகள் நடத்திய தாக்குதலினால் அந்த இறங்குதுறை பலத்த சேதமடைந்திருந்தது. இந்த இறங்குதுறையைத் திருத்தியமைத்த கடற்படையினர் அதனை மீளவும் பாவனைக்குத் திறந்துள்ளனர்.

அந்த இறங்குதுறையை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி திறந்துவைத்தார். இந்த நிகழ்வில் திருமலைத்துறைமுகப் பகுதியில் புதிதாகக் கடற்படையினர் அமைத்த கட்டடம் ஒன்றும், நீச்சல் தடாகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வசந்த ஹன்னங்கொட உட்பட கடற்படை சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### தொழில்நுட்பக் கல்லூரி

# பகுதிநேர வகுப்புகள் மார்ச் 7 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி முதல் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பகுதிநேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக, யாழ். தொழில்நுட்பக்கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

தொழில்புரிபவர்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், தொழிற்பயிற்சியில் ஈடுபடுவோர் முதலானோரின் நலன்கருதியே, இந்தக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படுவதாகவும்.

பொறியியல் தரச் சான்றிதழுக்குரிய இந்தப் பாடநெறிக்கு, உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்றோர் மற்றும் க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றோர் முதலானோர் விண்ணப்பிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கற்கைக்கான விண்ணப்பங்களை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும், அவற்றைப் பூர்த்திசெய்து உரிய காலத்தில் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ப)

### கையடக்க தொலைபேசி

# உள்வரும் அழைப்புக்கான கட்டணம் அறவீடு ஒத்திவைக்கும் நிலை!

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கையடக்கத் தொலைபேசிகளின் உள்வரும் அழைப்புக்குக் கட்டணம் அறிவிடப்படமாட்டாது என்று, முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், தற்போது அதனை ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைத்தொடர்பு சம்பந்தமான எந்தவிதமான மாற்றங்களாக இருப்பினும், பாவனையாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே அவை தொடர்பான விபரங்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்படாது என்னும் அறிவிப்பானது, குறுகிய காலப்பகுதியில் அறிவிக்கப்பட்டுள்ளமையால் - அதனை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படும் என்பதாலேயே, அதனை ஒத்திவைத்துள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் மையம் அறிவித்துள்ளது.

(01)

### துன்னாலை கிழக்கு

# தனியார் காணிகளிலிருந்து மண் அகழ்வதைத் தடுக்கவும்

## பிரதேச செயலருக்கு மகஜர்

(வடமராட்சி)

துன்னாலை கிழக்கு பகுதியிலுள்ள தனியார் காணி களில் இருந்து, மண் கடத்தப்பட்டுவருவதை தடுக்குமாறு துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் - கரவெட்டி பிரதேச செயலரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

துன்னாலை கிழக்கு பகுதிகளில் தினமும் இரவு 11 மணிதொடக்கம், அதிகாலை 4 மணிவரை லொறிகள் மூலம் மண் கடத்தப்பட்டுவருவதாகவும், இவர்களுக்கு கோஷ்டி ஒன்று பாதுகாப்பு வழங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மண்கடத்தலால் - சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளதாகவும், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை, விவசாய நிலங்கள் என்பன அழிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் துன்னாலை கிழக்கு விவசாய அமைப்பு, வெலிக்கன் தோட்டப்பிள்ளையார் பரிபாலன சபை, கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். எனவே, இந்தப் பகுதியிலிருந்து மண் கடத்தப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

நேர்காணல்

- காவலூர் விஜேந்திரன்

# இன்றைய கணிப்பீடுகள், ஒப்படைகள் எல்லா மாணவர்களுக்கும் பொருந்தாது



கணக்கியல் ஆசிரியரும், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபருமான நாகலிங்கம் வன்னியசிங்கத்தைக் கல்லூரியில் சந்தித்தோம். அவரிடம் இன்றைய கல்விச் சூழல் தொடர்பாகக் கேட்டபொழுது - ஆசிரியர், மாண வர்களது கற்பித்தல், கற்றல் சம்பந்தமாகப் பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

நான் கடந்த இரு தசாப்தங்களாக ஆசிரியப் பணியைப் புரிந்து வருகிறேன். ஆசிரியத்துவம் என்பது பிரத்தியேகமான சிறப்பான பணி. இதனை முழுமையாக ஏற்றுக்கொண்டு செயற்பட்டால், அவர்கள் உயர்நிலை அடைவார்கள். ஆசிரியர்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் நிலை, தகுதி, தன்மை அறிந்து அவாகளுக்குக் கற்பிக்கவேண்டும். ஆசிரியர்கள் தேடிக்கற்பதன் மூலமே மாணவர்களுக்கு முழுமையான உழைப்பை வழங்க முடியும். தனிப்பட்டரீதியில் இனங்காணும் மாணவர்களை, கற்றல் தன்மைக்கேற்ப பாடசாலையின் மேலதிக நேரங்களில் கற்பிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மாணவர்கள் - அதிலும் உயர்தர மாணவர்கள் - மாணவர்கள் என்றநிலையை மறந்தவர்களாகவே உள்ளனர் (எல்லோரும் அல்ல). இந்த மாணவர்கள் போர்க்காலச் சூழ்நிலையில் பிறந்தவர்கள். சிறு வயதிலிருந்தே போர், அவலம், இடப்பெயர்வு, பதற்றமான சூழ்நிலையில் வளர்ந்தவர்கள். இவர்கள் பாடசாலை மீதும், ஆசிரியர்கள் மீதும் நம்பிக்கை அற்றவர்களாக இருப்பதுடன், தம் மீதே நம்பிக்கை அற்றவர்களாகவே பெரும்பாலான மாணவர்கள் உள்ளனர். இவை பாடசாலையில் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கின்றது. இவை சிலவேளை பாடசாலை நிர்வாகத்துக்கு சவாலாக அமைவதானால், மாணவர்களுக்கும் - நிர்வாகத்துக்குமிடையே முரணபாடு ஏற்படுகின்றன. இன்றைய மாணவர்கள் பிழைகளை நியாயப்படுத்துவதுடன், தொடர்ந் தும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இவற்றிற்கு வீட்டுச்சூழல், சமூக மாற்றங்கூட காரணமாகலாம்.

உயர்தர மாணவர்கள் கல்வியைவிட, வேறு தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுகின்றனர். எவை எமது வாழ்வுக்கு அவசியம், கல்விக்கு இவை எந்தவகையில் உதவுகின்றது என்ற சிந்தனை அற்றவர்களாக உள்ளனர். பாடசாலையையோ, ஆசிரியர்களையோ நம்புவதில்லை. இணைப் பாட விதானச் செயற்பாடுகளிலும் பங்குகொள்வதில்லை. இவர்கள் தனியார் கல்வி நிலையங்களையே நம்பி, ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் ஒரு பாடத்தைக் கற்கிறார்கள். இதற்கு மாணவர்கள் கூறும் கருத்து - பாடசாலைகளில் கவர்ச்சிகரமான கற்பித்தல்முறை குறைவாகவுள்ளமையைக் காரணமாக முன்வைக்கிறார்கள்.

இன்றைய கல்விச் சீர்திருத்தக்கொள்கைகளினால் அறிமுகமாகியுள்ள ஒப்படை, கணிப்பீடு எல்லா மாணவர்களுக்கும் பொருந்தாது. மிகுதிறன் வாய்ந்த மாணவர்களுக்கு இவை தேவையற்றது. மெல்லக் கற்கும் மாணவர்களுக்குக் கணிப்பீடு மிகப்பயனுள்ளதாகவும், ஒப்படை - தேடல் விருத்தியடைவதற்கும் வழியமைக்கின்றது. இவற்றின் மீளாய்வுமூலம் மாணவர்கள் தமது கல்வி நிலையை அறிய முடிகின்றது. தமது நிலைகளின் தரம் அறிந்து செயற்படுவதற்கு வழிகாட்டியாக அமைவதுடன், முன்னேற்றத்துக்கும் காரணமாக அமைகின்றது.

மாணவர்களின் கல்விச் செயற்திட்ட முன்னெடுப்புக்களில் நான்குபேர் பங்குகொள்கின்றனர். இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிபர் முறையே கற்கவேண்டும்- கற்பிக்கவேண்டும் - ஊக்கமளிக்கவேண்டும்- வழிநடத்தவேண்டும். இவ்வாறு தொடர் நடவடிக்கையாகப் பூரணமாக ஒவ்வொருவரும் ஈடுபடும்போது, மாணவர்கள் மேல்நிலைக்கு வருகிறார்கள். இவற்றுடன் இணைப் பாட விதானச் செயற்பாடுகளிலும் முழுமையாக இணைந்துகொள்வதன்மூலம், மாணவர்கள் தமது இலக்கை அடைவார்கள். இதில் வேறு திசைதிருப்பங்களின்றி செயற்படும் பக்குவத்தை ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற வாசகத்துக்கேற்ப சாதி, மத பேதமற்ற சமரச சன மார்க்கநெறி என்ற கோட்பாட்டின்படி எல்லா மாணவர்களையும் உள்வாங்குகிறோம். இதில் 90 வீதமான மாணவர்கள் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கள். இந்த மாணவர்கள் பாடசாலைக் காலத்திலேயே தொழில்களை நாடிச் செல்கிறார்கள். இதற்கு குடும்பநிலையும், போரினால் ஏற்பட்ட பாதிப்பும் காரணமாக இருக்கின்றது. பாடசாலை முடிந்தவுடன் (பகுதி நேரமாக) மாணவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். இதில் ஒரு பகுதியினர் குடும்ப வறுமை நிலை காரணமாகவும் வேலைக்குச் செல்கிறார்கள்.

இன்று பாடசாலைகளிலுள்ள பெருங்குறை - போதிய ஆசிரிய வளமின்மை, அதிலும் இருக்கின்ற ஆசிரியர்களில் உரிய பாடங்களை கற்பிப்பதற்கெனத் தகுதியானவர்கள் மிகமிகக் குறைவு. குறிப்பாக, ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறை- பெரும் குறையாகவுள்ளது. ஆரம்ப, இடைநிலை கல்விகளுக்கு பட்டதாரிகளையும், ஏனையவர்களையும் உள்வாங்கலாம். இவர்களுக்கென விசேட பயிற்சிகளை வழங்குவதன்மூலம, ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பலாம். தேவையானபோதே தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். யாழ். நகரிலேயே எமது கல்லூரியைச் சுற்றி செல்வாக்குமிக்க கல்லூரிகள் உள்ளபோதும், புளியமரத்தின்கீழ் பூந்தோட்டம் அமைக்கும் முயற்சியில் நான் இறங்கியுள்ளேன். கடினமாக இருந்தாலும், எனது கல்லூரி நிர்வாகத்தினது துணையுடன் இயன்றவரை முயற்சி செய்ய வுள்ளேன்.

எமது மாணவர்கள் கல்வி சார்பான நிகழ்வுகளிலும், ஏனைய செயற்பாடுகளிலும் ஒப்பீட்டு ரீதியில் வசதி குறைந்தவர்களாகவேயுள்ளனர்.

இன்று அல்ல கடந்த 6 வருடங்களாக மாணவர்களின் கல்விநிலை வீழ்ச்சியடைந்து வருகின்றது. கட்டுக்கோப்பான கட்டமைப்பு மாணவர் மத்தியில் இடப்பெயர்வுடன் இல்லாமல் போயுள்ளது. இன்றைய மாணவர்கள் இடப்பெயர்வுகளால் பலதரப்பட்டவர்களின் அறிமுகம் (வழி தவறல்), பல்வேறு சமூக மாற்றங்களையும், உள்வாங்கியவர்களாகவேயுள்ளனர். சமய நம்பிக்கையும், பணிவுடன் செயற்படும் பக்குவமும் அற்றவர்களாகவே மாணவர்கள் மாறுகின்றனர். சக மாணவர்களையோ, ஆசிரியர்களையோ மதிக்கும் நிலையற்றவர்களாகவே இன்று அதிகமாகவுள்ளனர். இவ்வாறனவர்களிற்கு படிப்புத் தேவையில்லை.

இன்று இலத்திரனியல் கருவிகளின் ஆதிக்கமும், சினிமா மோகமும், தென்னிலங்கைக் கலாசாரமும் இன்றைய இளைஞர்- யுவதிகளைப் பெருமளவில் பாதித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு மாணவர்கள் விதிவிலக்கல்ல. நாகரிக மாற்றத்திற்கு அடிமையாகி நலிவடைந்து போயுள்ள இளம் சமூகம் மாறவேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் நற்சிந்தனையுடையவர்களாகவே வளரவேண்டும். நாட்டிற்கும், சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாக மாறவேண்டும்.

இன்று இலத்திரனியல் மயமான உலகில் வாழ்வதனால், எமது வளர்ச்சிக்கு உபயோகமான முறையிலேயே இந்த இலத்திரனியல் சாதனங்களை உபயோகிககவேண்டும். எமது நிலைமைகளை மறந்து, தேவையற்ற வகையில் நேரத்தைச் செலவழிப்பதுடன், வாழ்க்கையைச் சீரழிக்கும் வகையில், இன்றைய இளம் சமூகம் - இலத்திரனியல் ஊடகங்களை உபயோகிக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் காலமாற்றத்தில் முடிவடையுமா? இல்லைத் தொடருமா? இன்றைய மாணவர்களே சமூகத்தையும், நாட்டையும் கட்டிக்காக்கும் பொறுப்புடையவர்கள். இவ்வாறு அனுபவரீதியாகப் பல கருத்துக் களை பகிர்ந்துகொண்டார்.

---

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XIV - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

பொதுவாக அகதிகளுக்கு ஐரோப்பாவில் அரிசியல்ரீதியான வாக்குரிமையோ, தங்களுடைய பிரதிநிதிகளைத் தாங்கள் தெரிவுசெய்யும் உரிமையோ கிடையாது. ஆனால், அகதித் தொழிலாளர்கள் -தொழிற்சங்கரீதியாக ஒன்று

சாயகத்தில் எந்தத் தொழில்களை கேவலமான தொழில்களாக குடாநாட்டு இளைஞர்கள் கருதினார்களோ? எந்தத் தொழில் செய்பவர்களை, செய்யும் தொழிலின் அடிப்படையில் இழிவாக நடத்தினார்களோ - அதே தொழில்களை இவர்கள் செய்ய நேர்ந்தபோது, இவர்கள் மனதில் ஆழமாக வேரூன்றிநின்ற சாதியத்தின் வேர்கள் -ஆட்டங்காணச் செய்தது.



சேரும்போது, அவர்கள் ஒருமுகப்படுத்தப்படுவார்கள். தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும். இந்தப் பிரதிநிதித்துவத்தின்மூலம் தங்களுடைய நாட்டுப்பிரச்சினைகளை வெளிப்படுத்தலாம். குர்திஷ், பாலஸ்தின மக்கள் பிரான்சில் தொழிற்சங்கரீதியாக ஒருங்கிணைந்து, பிரெஞ்சு தொழிற்சங்க அமைப்புக்கூடாக பிரான்ஸ் அரசுக்கும், பிரான்ஸ் மக்களுக்கும் தங்கள் பிரச்சினையை எடுத்துக்கூறுகின்றனர். ஆனால், இன முரண்பாட்டால் பாதிக்கப்பட்டு, அதற்கு எதிராகப் போராடும் தமிழர்களுக்கு இந்த முக்கியத்துவம் தெரியவில்லை என்பதே அந்தக் கருத்தாகும் .

1977 இற்கும், 1987 இற்கும் இடைப்பட்ட 10 வருடகாலம் -ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழ் அகதிகளைப் பொறுத்தவரை மிகவும் நெருக்கடிமிக்க ஒரு காலகட்டம் என்று சொல்லலாம். இந்தக் காலகட்டத்தில் அரசியல் தஞ்சம்கோரி, அகதிகளாகச் சென்றவர்களை, முதல் தலைமுறையினர் என்று வரையறுக்கலாம்.

ஆனால், தமிழர்கள் என்ற வகையில் ஐரோப்பாவுக்கு முத லில் சென்றவர்கள் பாண்டிச்சே ரித் தமிழர்கள். இவர்களின் புலம்பெயர்வு 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தொடங்கி விட்டது.

கூலிகளாகவும், படையாட்களாகவும் பிரெஞ்சு காலணித்துவவாதிகளால் கொண்டுவரப்பட்ட இவர்களின் இன்றைய வாரிசுகளுக்குப் பெரும்பாலும் தமிழ் தெரியாது. ஆனால், இவர்கள் தமிழ் அடையாளத்தை முற்றாக இழந்து, பிரெஞ்சுக்காரர்களாக மாறி விட்டார்கள் என்று சொல்லிவிடமுடியாது.

இன்றைய தலைமுறையினர் பிரெஞ்சு படைத்துறையிலும் மற்றும் நிர்வாகத் துறையிலும் அதியுயர் பதவிகளில் இருக்கின்றார்கள். தமிழ் சினிமாவைத் தவறாமல் பார்ப்பதும், தமிழ் சினிமாப் பாட்டுக்களைக் கேட்பதும், தங்களுடைய தமிழ் அடையாளத்தைப் பாதுகாக்கும் என்ற எண்ணம் இவர்களிடம் இருக்கிறது.

பிரான்ஸ் முழுவதும் பரவிவாழும் இவர்களது எண்ணிக்கை ஏறக்குறைய 21/2 இலட்சம் இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகின்றது. தமிழ்ச் சங்கங்கள், தமிழ் - பிரெஞ்சு கலாசார சங்கங்கள் என்று நிறைய அமைப்புக்கள் இவர்களிடம் இருக்கின்றன.

இவர்கள் மத்தியில் இருக்கும் தமிழ் உணர்வுள்ள கல்விமான்களின் முயற்சியால், பிரான்சிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் தமிழை ஒரு பாடமாகக் கற்கக்கூடிய வசதியைப் பிரெஞ்சு அரசாங்கம் ஏறபடுத்திக் கொடுத்துள்ளது. ஆனால், நடைமுறையில் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மாணவர்கள் தமிழ் கற்பதில்லை.

பாரிஸில் பிரபலமான சேர்போன் பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்துறையில் கடந்த ஆண்டு தமிழ் கற்ற 28 மாணவர்களில் 2 பேர் மட்டுமே தமிழர்கள். ஒருவர் ஈழத்தமிழர், ஒருவர் உணர்வுடனும், தமிழ் மீதான பற்றுதலுடனும் இருக்கிறார்கள். இவர்கள் ஆங்கில சமூகத்துடன் ஒன்றி வாழ்ந்து, அவர்களுடைய மொழியைப் பேசியபடியால், அகதியாகச் சென்ற தமிழர்களைப்போல பெரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளவில்லை.

1987 ஆம் ஆண்டுவரை அகதியாகச் சென்ற ஈழத்தமிழர்கள் - பெரும்பாலும் திருமணமாகாத இளைஞர்களாகவே இருந்தார்கள். திருமணமானவர்கள்கூட குடும்பத்தை தாயகத்தில் விட்டுவிட்டுத் தனியன்களாகவே அங்கு செனறனர். இந்தக் காலகட்டத்தில் குடும்பமாகப் புலம்பெயர்ந்து சென்றவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தது.

இதேவேளை, இந்தக் காலப்பகுதி புலம்பெயர்ந்த குடாநாட்டு தமிழ் இளைஞர்களின் கருத்தியல் தளத்தில் தாக்கத்தை உண்டு பண்ணிய ஒரு காலகட்டமாக இருந்தது.

இங்கு தாயகத்தில் எந்தத் தொழில்களை கேவலமான தொழில்களாகக் குடாநாட்டு இளைஞர்கள் கருதினார்களோ? எந்தத் தொழில் செய்பவர்களை, செய்யும் தொழிலின் அடிப்படையில் இழிவாக நடத்தினார்களோ - அதே தொழில்களை இவர்கள் செய்ய நேர்ந்தபோது, இவர்கள் மனதில் ஆழமாக வேரூன்றிநின்ற சாதியத்தின் வேர்கள் - ஆட்டங்காண ஆரம்பித்தன.

காலடி மண்ணும்... சுவாசிக்கும் காற்றும்

150 வருட புலப்பெயர்வு வரலாற்றைக் கொண்ட பாண்டிச்சேரித் தமிழர்கள் - பாரிஸ் நகரத்தில் 1990 வரை 1 உணவு விடுதியையும், 2 பல்பொருள் விற்பனை நிலையங்களையும் மட்டுமே வைத்திருந்தார்கள். (1990 - 2000 இற்கு இடைப்பட்ட காலத்தில் 22 உணவு விடுதிகளையும், 157 பல்பொருள் விற்பனை நிலையங்களையும் ஈழத்தமிழர்கள் உருவாக்கியது ஒரு சாதனை என்று சொல்லலாம்)

ஈழத் தமிழர்களின் புலப்பெயர்வு 1940 களில் லண்டனை நோக்கி ஆரம்பித்தது. ஆங்கிலக் கல்வி கற்ற யாழ்ப்பாண மேல்தட்டு வர்க்கத்தினரே இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள். இவர்களில் 80% மானவர்கள் - முழுக்க முழுக்க 'இங்கிலீஸ்'காரர்களாகி விட்டார்கள். மிகுதி 20 வீதமானவர்களே இன்னமும் தாயக

என்ற அடையாளத்தை மட்டும் கொண்டு, ஒன்றுக்குப் பத்தாய் ஒரே அறையில் அடைபட்டுக் கிடந்தபோது... ஊரில் வடக்கென்றும், தெற்கென்றும், ஒழுங்கையென்றும், தெருவென்றும் பார்த்து - இளைஞர்களைப் பிரித்து வைத்த சாதியத்துக்குச் சவுக்கடி விழுந்தது.

ஆனால், இந்தநிலை நீண்டநாள் நீடிக்கவில்லை. இங்கிருந்து சென்ற தொ(ல்)லைபேசி அழைப்புக்களும்... அன்பு மடல்களும், பிரிவுத்துயரை மட்டும்காவிச் செல்லவில்லை. அறிவுரை என்ற பெயரில் இங்குள்ள சாதியத்தையும் காவிச்சென்றது.

1987 ஆம் ஆண்டுவரை ஈழத் தமிழர்கள் என்ற அடையாளத்துடன் மட்டும் வாழ்ந்த தமிழர்கள், அதன் பின்னர் உறவு, ஊர், பிரதேசம் என்ற அடிப்படையில் தங்கள் வதிவிடங்களைப் பிரித்துக்கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

உறவினர் என்று யாரும் இல்லாமல், நண்பர்களுடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில்- நம்மவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. ஆனால், ஊரவர்கள், உறவினர்கள் வந்த பின்பு எல்லாவற்றையும் மீள எடுத்துப் பார்க்கின்ற ஒரு பழக்கம் பரவ ஆரம்பித்தது.

பொதுவாக ஊருக்குக் கடிதம் எழுதும் ஒருவர் - தான் இருக்கும் நகரத்தில், தனக்குத் தெரிந்தவர், உறவினர் என்று யார் இருக்கின்றார்கள், அவர்களுடன் தங்கியிருப்பவர்கள் யார், என்ன வேலை செய்கிறார்கள் என்றெல்லாம் விலாவாரியாகத் தகவல் சேகரித்து எழுதுவார்.

தான் தொழிற்சாலையில் அல்லது அலுவலகத்தில் வேலைசெய்வதாகவும், மற்றவர்கள் கோப்பை கழுவுகின்றார்கள், துப்பரவுப்பணி செய்கின்றார்கள் என்று, தானும் அதேவேலைகளையே செய்துகொண்டு, புளுகி எழுதுவார்கள்.

தான் எழுதியதை, ஊரில் உள்ளவர்கள் நம்பவேண்டும் என்பதற்காக, நல்ல புதுக்கார் ஒன்றுக்கு முன்னால் நின்று படம் எடுத்துவிடடு, தன்னுடைய கார் என்று சொல்லிப் படத்தை அனுப்புவார். தான் துப்பரவு செய்யும் ஒரு அலுவலகக் கட்டத்துக்குள் நின்று படம் எடுத்துவிட்டு, அதுதான் வேலை செய்யும் அலுவலகம் என்று குறிப்பிட்டு அனுப்பிவைப்பார்.

அதேபோல், ஒரு புதிய அடுக்குமாடி வீட்டின் முன்னால் நின்று படம் எடுத்துவிட்டு, அதுதான் குடியிருக்கும் வீடு என்றும், ஊருக்கு அனுப்பிவைக்கும் வழக்கமும் இருந்தது.

*(தொடரும்...)*

# மொறோக்கோ நிலநடுக்கத்தில் 20 பேர்வரை கொல்லப்பட்டனர்!

மெடிரெறேனியன் கடலின் மத்தியில் ஆரம்பித்த நிலநடுக்கத்தினால் மொறோக்கோவில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கடற்கரை நகரான அல் கொசிமாவும் அதன் அருகிலமைந்த பிரதேசங்களும் இந்த நிலநடுக்கத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக பேச்சாளர் ஒருவர் ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

அயிட் கமரா நகருக்கு அருகில் அமைந்துள்ள பிரதேசத்தில் 15 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே மொறோக்கோவின் செய்தி நிறுவனம் ஒன்று 20 பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாகவும், 40 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதனிடையே மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கும், வேறு உதவிகளைச் செய்வதற்கும் மீட்புப் பணியாளர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

1960 ஆம் ஆண்டு நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 12000 பேர் மொறோக்கோவில் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலக்கரிச் சுரங்க வெடிவிபத்தில் சீனாவில் 24 பேர் கொல்லப்பட்டனர்


சீனாவின் வடபகுதியில் நிலச்சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 24 பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாமெனவும், ஏனைய சுரங்கத்தொழிலாளர்கள் 13 பேரைத் தேடும்பணியில் மீட்புப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுரங்கத்தில் நச்சுவாயு காணப்படுவதால் மீட்புப்பணியைத் துரிதமாக மேற்கொள்ளமுடியாதிருப்பதாகவும், சுரங்கத் தொழிலாளர்களை உயிருடன் மீட்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுவதாகவும் சுரங்கத் தொழிலாளர்களின் பாதுகாப்பு அதிகாரி வாங் தெரிவித்தார்.

சீனாவில் சுரங்கத் தொழிலை மேற்கொள்ளும் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு ஆண்டும் சுரங்கங்களில் சிக்கி மரணமடைந்துவருகின்றனர். எனினும் அரசாங்கம் பல பாதுகாப்பு நடவடிக்கைக்களை மேற்கொண்டுவருகின்றபோதிலும் அதனைத் தடுக்கமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 10 மாதங்களில் சீனாவில் ஏற்பட்ட சுரங்கத் தொழிலாளர்களின் மரணம் 7197 ஆக அதிகரித்துள்ளது.

# இந்திய ரொக்கெட் ஏவுதளம் பாரிய வெடிவிபத்தில் சேதம்!



இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஸ்ரீஹரிகோட்டா ரொக்கெட் ஏவுதளத்தில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 6 ஊழியர்கள் பலியாகினர். ஒரு பெரிய கட்டடமே சிதைந்து தரைமட்டமானது.

சதீஷ்தாவன் விண்வெளி ஆய்வு மையம் என்றழைக்கப்படும் இந்தத் தளத்தில் ரொக்கட்டுகளை உருவாக்கும் பிரிவுகளும், ரொக்கட் ஏவுதளமும் உள்ளன.

பெங்களூரிலுள்ள இஸ்ரோ மையத்தில் உருவாக்கப்படும் செயற்கைக் கோள்கள் இந்தத்தளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி மற்றும் ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட்டுகள் மூலம் ஏவப்பட்டு வருகின்றன.

இங்கு ரொக்கட்டுக்களுக்கு தேவையான திட, திரவ எரிபொருட்களும் உருவாக்கப்படுகின்றன. நேற்றுமுன்தினம் திட எரிபொருள் உருவாக்கும் மையத்தில் திடீரென பயங்கரமான வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் அந்த மையத்தின் கட்டடம் சிதறி, சின்னாபின்னமாகியது. எரிபொருள் வெடித்ததால் 3000 டிகிரி வெப்பம் உண்டானது. அதில் கட்டட இடிபாடுகள கூட உருகிப்போயின.

இங்கு பணியில் இருந்த கிருஷ்ணரெட்டி, சீனிவாசுலு, பஷீர் அகமது ஆகிய ரொக்கெட் நிபுணாகளும் பண்டிட் என்ற ஒப்பந்தகாரர் தொழிலாளரும அந்த இடத்திலேயே உடல் உருகிப் பரிதாபமாகப் பலியாயினர். கட்டடமும் தீப்பிடித்து வெடித்துச் சிதறி உருகியது.

மேலும் 2 பேர் கட்டட இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். உடனடியாக அங்குள்ள தீயணைப்புப் படைப்பிரிவுகள் அங்கு விரைந்தன. ஆனால் தீயை அணைக்கமுடியாமல் அவை திணறின.

சுமார் 4 மணிநேரம் போராடித்தான் ரொக்கெட்டின் திட எரிபொருளை அணைக்கமுடிந்தது. இதனால் கட்டட இடிபாடுகளில் சிக்கிய 2 பேரும் பலியாகிவிட்டனர்.

திட எரிபொருள் உருவாக்கும் பிரிவுக்குள் நுழையும் அனைவரும் அங்கு தங்களை டிசார்ஜ் செய்துகொண்டு நுழையவேண்டும் நம் உடலில் உள்ள சிறிய அளவிலான மின் இயக்கம்கூட திட எரிபொருளைத் தூண்டி வெடிக்கச்செய்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் இந்த மையம் உருவாக்கப்பட்ட திட எரிபொருளான ரொக்கட் பூஸ்ரர் இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டுக்கொண்டிருந்தபோது அது வெடித்துச் சிதறியதாக இஸ்ரோ செயலாளரான தாஸ் தெரிவித்தார்.

இந்த விண்வெளி மையத்தில் நடந்துள்ள முதல் பெரிய விபத்து இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்து குறித்து அறிந்தவுடன் இந்த விணவெளி ஆய்வுக்கழக (இஸ்ரோ) தலைவர் மாதவன் நாயர் பெங்களூரில் இருந்து சென்னை வந்தார். அங்கிருந்து சிறப்புக் ஹெலிகொப்டரில் ஸ்ரீஹரிகோட்டா புறப்பட்டுச் சென்றார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்- இந்தச் சம்பவம் மிகவும் துயரமானது. இருப்பினும் இதனால் ஸ்ரீஹரிகோட்டா மையத்தின் பணிகளில் பாதிப்பு ஏற்படாது என்றார்.

உலக நோக்கு

## உலகின் மிகப்பெரிய கப்பலின் இரண்டாவது பயணம்!




உலகிலேயே மிகப்பெரிய கப்பலான குயின்மேரி - 2 கப்பல் தனது இரண்டாவது பயணத்தை தொடங்கிவிட்டது. இங்கிலாந்தில் இருந்து புறப்பட்ட அந்த கப்பல் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள லாடர் டேல் துறைமுகத்தை அடைந்தது.

இந்தப் பயணத்துக்கு 22 நாட்கள் எடுத்தது. இப்போது அந்தக்கப்பல் தனது இரண்டாவது பயணத்தை தொடங்கியிருக்கிறது. புளோரிடாவில் இருந்து பிரேசில் நோக்கி தனது 12 நாள் பயணத்தை குயின்மேரி கப்பல் ஆரம்பித்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் இதில் பயணம் செய்கின்றனர்.

# லொக்கபீ குண்டுத்தாக்குதலுக்கும் லிபியாவுக்கும் தொடர்பேதும் இல்லை

## லிபிய பிரதமர் கூறுகிறார்



1988 இல் இடம்பெற்ற லொக்கபீ குண்டுத்தாக்குதல் மற்றும் 1999 இல் இடம்பெற்ற பிரித்தானிய பொலிஸ் 'யுவோணி பெல்சரின் மரணம் ஆகிய இரு சம்பவங்களுடனும் லிபியா எந்தவிதத்திலும் தொடர்புபட்டிருக்கவில்லை.

இவ்வாறு லிபிய பிரதமர் சுக்ரி கனீம் பி.பி.ஸி வானொலிக்குத் தெரிவித்தார்.

பிரித்தானியப் பொலிஸ் யுவோணியின் இழப்பீட்டுக்கான நஷ்டஈடும் வழங்கப்பட்டுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானியப் பொலிஸ் படையைச் சேர்ந்த யுவோணி பிரித்தானியாவில் அமைந்துள்ள லிபிய தூதுவராலயத்தின் முன்பாக துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்தவர் ஆவார்.

துப்பாக்கி ரவை லிபியத் தூதுவராலயத்துக்குள் இருந்து வெளியேறியதாகக் குற்றஞ் சுமத்தி பிரித்தானியா - லிபியாவுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்திருந்தது.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த லிபியப் பிரதமர் - உலக நாடுகளுடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கும், பொருளாதாரத் தடையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்குமாகவே மேற்படி சம்பவங்கள் இரண்டையும் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருந்தார்.



ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகியநாடுகளில் பலத்த சேதத்தைச் சந்தித்துவரும் அப்பாச்சி ரக ஹெலியின் தோற்றம்

# 63 வயதான பெண்மணி குழந்தை பெற்றெடுத்தார்

தமிழ்நாடு ஈரோட்டைச் சேர்ந்த 63 வயது பெண்மணிக்கு செயற்கை கருத்தரிப்பு முறையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தையின் தந்தைக்கு 74 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோட்டைச் சேர்ந்தவர் சுப்பிரமணியம். இவரது மனைவி பாப்பாத்தி. இவர்களுக்குத் திருமணமாகி 45 ஆண்டுகளாகின்றது. இருப்பினும் குழந்தைகள் இல்லை. சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இதற்கான சிகிச்சை எடுத்தும் பலன் இல்லை.

இந்தநிலையில் ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் பாப்பாத்திக்கு சோதனை நடத்தப்பட்டது. பின்னர் இக்ஸி முறையில் சோதனைக் குழாயில் கரு உருவாக்கப்பட்டு பாப்பாத்தியின் கருப்பையில் செலுத்தப்பட்டது. இதன் மூலம் தாய்மையடைந்த பாப்பாத்திக்கு நேற்றுமுன்தினம் அறுவைச்சிகிச்சை மூலம் ஆண் குழந்தை பிறந்தது. நேற்றுமுன்தினம் அவரது கணவர் சுப்பிரமணியத்திற்கு 74 ஆவது பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை ஆண்டுகள் கழித்து தனக்கு வாரிசு உருவாகியிருப்பது குறித்து சுப்பிரமணியம் அளவற்ற மகிழ்ச்சி தெரிவித்தார்.

பாப்பாத்திக்கு அவரது உறவினர் ஒரு கரு முட்டையை வழங்கினார். அதில் சுப்பிரமணியத்தின் விந்தணு சேர்க்கப்பட்டு கரு உருவானது. பின்னர் அந்தக் கரு பாப்பாத்தியின் கருப்பையில் வைக்கப்பட்டு குழந்தை உருவானது.

# தலிபான். அல்கொய்டா அமைப்புகளுக்கு எதிராக பாகிஸ்தான் போர் நடவடிக்கைகளை ஆரம்பித்தது

தலிபான், அல்கொய்டா ஆகிய தீவிரவாத அமைப்புக்களுக்கெதிரான போர்நடவடிக்கைகளை பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் படையினர் ஆரம்பித்தனர். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் ஷேக் ரசீட் அகமட் -

வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கெதிராக போர்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அல்கொய்டா தலைவர் பின்லேடனைக் கைதுசெய்வது பற்றியோ அல்லது தலிபான் இயக்கத் தலைவர் முல்லா முகமட் ஒமரைக் கைதுசெய்வது பற்றியோ இவர் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

கடந்த சில வாரங்களாக பாகிஸ்தான் அதிகாரிகள் எல்லைப் பிரதேசத்தில சிறு குழுக்காக வாழும் மக்களின் தலைவர்களிடம் போராளிக் குழுக்கள் மறைந்துவாழும் இடங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுள்ளனர்.

சில தீவிரவாதிகளை இக்குழுக்கள் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் பிடித்து ஒப்படைத்துள்ளன. ஆனால், தலிபான் மற்றும் அல்கொய்டா ஆகிய தீவிரவாதக் குழுக்களுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் அவர்கள் வேறு இடங்களுக்கு தப்பிச் செல்வதற்கு அனுமதியளித்துள்ளனர்.

பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினர் பின்லேடனை உடன் கைதுசெய்வது தற்போதைய போர்நடவடிக்கையின் நோக்கமல்ல எனவும் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் தொடக்கம் பாகிஸ்தான் துருப்பினர் எல்லைப் பிரதேசத்தில் கண்காணிப்பினை அதிகரித்துள்ளனர். பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டும், கனரக ஆயுதங்கள் குவிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



இதனிடையே எல்லையின் இரு பக்கத்திலும் போர்நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாக ஆப்கானிஸ்தானிலுள்ள கூட்டுப்படைகளின் அதிகாரியான டேவிட் பாரோ தெரிவித்தார்.

நியூயோர்க், வொஷிங்ரன் ஆகிய நகரங்களில் 2001 செப்ரெம்பர் தாக்குதலின் பின்னர் - பாகிஸ்தானும், அமெரிக்காவும் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் இணைந்துசெயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland




'இதென்ன அநியாயம்... எங்கடை சொந்தக் கடலிலை எங்கடை மீனவ ,சகோதரர்கள் மீன் பிடிக்க முடியாத நிலை உண்டாயிருக்கென்றால்.. இந்த அட்டூழியத்தை ஆரிட்டை போய் சொல்வதாம்...?'

'என்ன மணியம் கொதிச்சுப்போய் நிற்கிறாய்...?'

'கொதிக்காமல் பின்னை கூனிப்போய் நிற்கச் சொல்லுறாயே... தரையிலை உயர்பாதுகாப்பு வலயம் என்று ஆமிக்காரர் இருக்க விடுகினமில்லை, கடல்லை இறங்கி தொழில் செய்யப்போனா... இந்தியா விலை இருந்து இங்கை வந்து வெட்டுறாங்கள் என்றால்... கேட்க ஒருவருமில்லை என்ற திமிர்தானோ... இவங்களுக்கு எங்கடை மண்ணுக் கையும், கடலுக்கையும் வந்தான் வரத்தான் எல்லாம் வந்து நாட்டாமை காட்டத் தொடங்கீட்டினம்... நான் சொல்லுறது பிழையே கனகு...?'

'ஓமோம்... தரையிலை கொட்டில் போடேலாது... தோட்டம் செய்யேலாது... அதுக்கு இராணுவம் விடாது கடலிலை சுதந்திரமா மீன் பிடிக்கேலாது. அதுக்கு கடற்படையும், இந்திய மீனவரும் விடாமல் சுடுகினம். வெட்டினம் என்றால்... எல்லோருமாச் சேர்ந்து எங்களை மேலை அனுப்பத்தான் பாக்கினம் போலை...'

'பொறு... கனகு... இந்தத் தேர்தலிலை எங்களைப் பாதுகாக்க கூடிய, எங்கடை உரிமைகளை பெற்றுத் தரக்கூடிய ஒரே ஒரு சக்தியின் பின்னாலை நாங்கள் நிற்கிறம் என்றதை முதலிலை உலகுக்குக் காட்ட வேண்டும்... பிறகு உவையளைப் பார்த்துக்கொள்ளலாம்...'

'எங்கடை ஊருக்கை... எங்கடை கடலுக்கை... அத்துமீறி நுழைந்து அராஜகம் செய்துகொண்டு... எல்லைதாண்டிய பயங்கரவாதம் பற்றியெல்லே எல்லா ஆக்கிரமிப்பாளரும் பேசினம்... உது திமிர்தானே...!'

தெருவாசி

# 14 கட்சிகள், 27 சுயேட்சை குழுக்கள் அம்பாறையில் போட்டியிடுகின்றன!

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத தேர்தலில் போட்டியிடுவதற்காக அம்பாறை மாவட்டத்தில 14 அரசியற் கட்சிகளும் 27 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி ஆகிய அரசியற் கட்சிகள் உட்பட 14 அரசியற் கட்சிகளும், 27 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளன.

ஈ.பி.டி.பி சார்பில் - குணசேகரம் சங்கர், வேலாயுதம் ரவீந்திரன், நடராஜா கிருபைராஜா, அபூபக்கர் சகாப்தீன், நெல்சன் சுசில் எதிரிசிங்க, துரைராஜன் லால், காளிக்குட்டி சண்முகநாதன், களுபண்டா ஞானரத்ன, லக்ஷ்மன குலசிறி தர்மதாச, அலியாஸ் முகமட் பிர்தௌஸ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில்- ரி.தயாரத்ன, சந்திரதாஸ கலப்பதி, நிஹால் பக்மீபவ, அமரசிங்க ஆராய்ச்சிகோ விஜேசூரிய, இராசையா - சநதிரசேனா, ஜெயமுனி தயாமெத்தா நந்தசில்வா, அமரதாஸ ஆனந்த, பொன்னம் பெருமகே, ஜோர்ஜ், கோல்டின் பெர்னான்டோ, எம்.எம். முத்துகொட, துரையப்பா - முத்து கிருஷ்ணன். ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம், நிஜாமுடீன் சிகாப்தீன், எம்.ஐ.எம்.மன்சூர், இ.எல். உவைஸ், என்.எ.அப்துல் மஜீத், எ.எம்.எம்.நவ்சாத், எஸ்.எச்.யூனுஸ் லெவ்வை, என்.சி.எம்.பௌசால், எம்.நிசாம் காரியப்பர், எஸ்.எல்.மசூர் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் - பேரியல் அஷ்ரப், எ.எல்.எம். அதாவுல்லா, எச்.எம். எம். ஹரீஸ், ரி.கே.தேவ்ாரப்பெரும, விமல வீரதிஸநாயக்க ஆரியரட்ண விஜய விக்கிரம, மஞ்சுளா பெர்னா ண்டோ அனோல்ட் விஜயபண்டார, வசந்தகுமார பியதிஸ்ஸ, கே.டபிள்யூ கருணா சாகர ஆகியோர் போட்டியிடுகின்றனர். (07)

# கூட்டமைப்பு வேட்பாளர்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் இன்று கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றுகாலை 10 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹொரவப் பொத்தானை பிரதேச சபை கலைப்பு

(கொழும்பு)

அனுராதபுரம் மாவட்டம் ஹொரவப் பொத்தானை பிரதேசசபையை, வட மத்திய மாகாணசபை முதலமைச்சர் நேற்றுக் கலைத்தார்.

இந்தப் பிரதேசசபையின் நிர்வாக அதிகாரங்களை உள்ளூராட்சி ஆணையாளருக்கு உடனடியாக மாற்றுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஐ.தே.கவின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்த பிரதேசசபையில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாலேயே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக வடமத்திய மாகாணசபை அறிவித்துள்ளது.

## 171 வேட்பாளர்கள்...

குழுவினருமே வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளன.

வவுனியா அரச செயலகத்தில் நேற்று ஈ.பி.டி.பி வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தது. அந்தக் கட்சியின் வேட்பாளர் விபரம் வருமாறு,

அந்தோனிப்பிள்ளை ஜெயக்குமார், சிவான் சிவகுமார், இளையதம்பி ஹரிசந்திரன், சபிரியார் பெனார்ந்து லெம்பட், செபமாலை திசவீரசிங்கம், குமரகுரு சஞ்சீவ், அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரி, சுபசிங்க முதியன் சபோகே குமாரசிங்க, குமாரசாமி ஸ்ரெனி (03)

## மட்டக்களப்பில்...

முதன்மை வேட்பாளராக ஜோசப் பரராஜசிங்கமும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# 5 அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழு வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன!

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தாக்கல்செய்யப்பட்ட வேட்புமனுக்களில் சுயேட்சை குழுவினதும், 5 அரசியற் கட்சிகளினதும் மனுக்கள் தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதிநாள் நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தன. இதன் பின்னர் வேட்புமனுக்கள் மீதான ஆட்சேபணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட கட்சிகளில் 5 அரசியல் கட்சிகளினதும் ஒரு சுயேட்சைக் குழுவினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

கண்டி மாவட்டத்தில் சுயேட்சை குழு வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

மாத்தறையில் ஐக்கிய லலித் முன்னணியின் மனுவும், குருநாகலில் சுயேட்சைக் குழு ஒன்றினதும் மட்டக்களப்பு முஸ்லிம் கட்சியினதும், பதுளையில் மலையக மக்கள் முன்னணியினதும், அம்பாந்தோட்டையில் ஹெல உறுமய கட்சியினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக அந்தப் பகுதி தேர்தல் தொகுதி வத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். (01)

## பொதுத் தேர்தல்...

இலங்கையின் சமாதானத்துக்கும், சுபீட்சமான எதிர்காலத்துக்கும் வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு இறுதியான தீர்வு ஒன்று அவசியம் என்றும் எனினும் இலங்கையில் அரசியற் கட்சிகள் சமாதான செயற்பாடுகள் தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருப்பதாகவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் இலங்கையின் அரசியற் தலைவர்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரித்தானிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மைக் ஓ பிறெய்ன் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹக்கீமுக்கு..

சென்று கொண்டிருந்தவேளை கல்முனைக்குடி என்ற இடத்தில் வைத்து இவரது வாகனத் தொடரணி கல்வீச்சுக்கு இலக்கானது. இந்தக் கல்வீச்சில் எவருக்கும் காயம் ஏற்படாத போதிலும் வாகனங்கள் சில சேதமடைந்தன.

இது குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை. (07)

# கண்காணிப்புக் குழு...

என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை இன்றுடன் பதவி விலகிச் செல்லும் யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் றெஜார்ண் போர் உல்வ்விற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நேற்று நினைவுச் சின்னத்தையளித்து கௌரவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# நீதியான தேர்தல் இடம்பெறுவதற்கு...

உருவாக்காமலும் பத்திரிகைகள் செயற்படுதல் அவசியம்.

நடைபெறவுள்ள தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக பதிவுசெய்யப்பட்ட 8 கட்சிகளும், இரண்டு சுயேட்சை அணிகளும் விண்ணப்பித்துள்ளன.

கடந்த தேர்தலின்போது இடம்பெற்றது போன்று வன்முறைகள் எதுவும் இடம்பெறாதிருக்க வேண்டுமென சகல வேட்பாளர்களிடமும் வலியுறுத்தியுள்ளேன். அதற்கு அவர்களும் செவிசாய்த்து உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்தமுறை சுதந்திரமானதும், அமைதியானதும், நீதியானதுமான தேர்தல் இடம்பெற அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். அந்தவகையில், பத்திரிகையாளர்கள் தமது பணியைச் சிறப்பாக ஆற்றவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜாவும் கலந்து கொண்டார். (ப-111)

# 8 அரசியல் கட்சிகள்...

மீரா லெப்பை லெவான், எஸ்.யான்ஸி, எம். அமிர்அலி, எம்.சாகில், எஸ். தாஜ்மதின், எம்.ஹமீட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை - டக்ளஸ் தேவானந்தாவை முதன்மை வேட்பாளராகக் கொண்ட நியமனப் பத்திரத்தை ஈ.பி.டி.பி. தாக்கல் செய்தது.

வேலும்மயிலும் குகேந்திரன், நடராஜா மதனராஜா, கனகரட்ணம் மணிபல்லவராஜன், சின்னத்துரை தவராசா, கந்தசாமி ஐயர் பால நடராஜா ஐயர், திருநாவுக்கரசு ஸ்ரீதரன், சங்கரப்பிள்ளை சிவதாசன், துரைராஜா பாஸ்கரன், மகேஸ்வரி வேலாயுதம், தம்பித்துரை சிவகுமாரன், பசுபதி சிவரெத்தினம் ஆகியோர் ஈ.பி.டி.பி. சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை முஹமது சாலின் முஹமது ரபியை தலைமை வேட்பாளராகக் கொண்ட சுயேட்சைக் குழுவொன்றும் நேற்று வேட்புமனுவைக் கையளித்தது.

ஜெயகுணதிலகம் காண்டீபன், யோகநாதன் றொபேட் வின்சன், ஆனந்தன் சிவனேஸ்வரன், தெய்வேந்திரம் ஜெகதீபன், சின்னமணி தனேஸ்வரன், தனேஸ்வரன் ஜெஸ்மின் றமினா, தெய்வேந்திரம் பகிரதி, சேகரம் ஜெயவதனி, செல்வராணி தவச்செல்வம் இராசையா முகுந்தர், பொன்னுத்துரை சிவகாந்தன் ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - யாழ்.மாவட்டத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கான சின்னங்கள் நேற்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவிக்கப்பட்டன.

தமிழரசுக் கட்சி - வீடு, ஈ.பி.டி.பி.- வீணை, ஐக்கிய சோசலிசக்கட்சி- ஓட்டோ, ஜாதிக ஹெல உறுமய - சங்கு, புதிய இடதுசாரி முன்னணி- மேசை, றுகுணு மக்கள் கட்சி-கார், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - மரம், சுவராஜ்ய கட்சி - கோப்பை, சுயேட்சைக்குழு (1) - பூட்டு (ஆனந்தசங்கரி), சுயேட்சைக்குழு (2)- கூசா. (111)

# நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில்...

குழுக்களினது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேசிய ஹெல உறுமய, பதுளை மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பு மனுக்கள் அடங்குகின்றன.

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்திலேயே அதிகமான கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

அங்கு 14 அரசியல் கட்சிகளும், 27 சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 17 அரசியல் கட்சிகள், 11 சுயேட்சைக் குழுக்கள் அடங்கலாக 28 குழுக்கள் போட்டியிடுகின்றன.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய சுதந்திர முன்னணியும் 9 மாவட்டங்களுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் அமைச்சர் எம்.எச்.மொஹமட் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

காலி மாவட்டத்துக்காக நேற்று ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மகள் சுதந்திர முன்னணியும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளர் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் தலைமை வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரசிறி தொடாங்கொட செயற்படுகின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட 14 அரசியல் கட்சிகளும், 8 சுயேச்சைக் குழுக்களும் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதி பெற்றுள்ளன.

கண்டி மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 14 அரசியல் கட்சிகளும், 10 சுயேச்சைக்குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்தபோதிலும் ஒரு சுயேச்சைக்குழுவின் வேட்பு மனு சட்ட திட்டங்களுக்கு அமைவாக இல்லையென்ற காரணத்தால் தெரிவத்தாட்சி அதிகாரியினால் நிராகரிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 14 அரசியல் கட்சிகளினதும், 4 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் 10 அரசியல் கட்சிகளும், 6 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளன. இதில் தாக்கல் செய்த தேசிய அபிவிருத்திக் கட்சியின் வேட்பு மனு, சுயேச்சைக் குழுக்கள் இரண்டினது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 10 அரசியல் கட்சிகளும், 9 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.




புதிய கணனி வகுப்புகள்

Diploma in Computer Accounting

Diploma in Desktop Publishing

Diploma in Hardware Engineering

Diploma in MS Office

Start: 02/03/2004

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT solution

73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674


## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1593 திகதி: 24.02.2004

வெற்றி இலக்கங்கள்

| N | 4 | 8 | 7 | 4 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|

இப்பத்திரிகை இல. 2[illegible] ாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.